தமிழிசைப் பாக்கள்

துண்டிப் பிள்ளையார் வெள்ளிவிழா மலர் - 2025

சிவபாதரத்தினம் சிவசிவா

வெளியீடு: பூரணை நிலையம், யாழ் – ஊரெழு

தமிழிசைப் பாக்கள்

(துண்டிப் பிள்ளையார் வெள்ளிவிழா மலர் - 2025)

சிவபாதரத்தினம் சிவசிவா

நூல் விபரப் பட்டியல்

நூலின் பெயர் :- ¨தமிழிசைப் பாக்கள்¨
(துண்டிப் பிள்ளையார் வெள்ளிவிழா மலர் - 2025)
நூலாசிரியர் :- சி.சிவசிவா (B.FA,P.G.D.E,M.Ed,SLEAS-II)
உரிமை :- ஆசிரியருக்கு
முதல் பதிப்பு :- 28.06.2025
அச்சுப் பதிப்பு :- கிங்ஸ் பதிப்பகம்
வெளியீடு :- பூரண நிலையம், யாழ் ஊரெழு
பக்கங்கள் :- 116 + xvi
தாளின் அளவு :- A5, 70 mg
பிரதிகள் :- 300
அட்டைப் படம் :- ப.பிரதீபன்
விலை :- 600.00
ISBN 978 - 624 - 92566 - 0 - 6

Title :- ¨Thamizeisaip Pakkal¨
(Thundip Pillaiyar Silver Jubilee Malar –2025)
The Authoar :- S.Sivasiva
Copyright :- To the Authoar
First Edition :- 28.06.2025
Printed by :- Kings Printer
Distributors :- Purana Center, Jaffna Urelu ,
Pages :- 116 + xvi
Size :- A5, 70 mg
Copies :- 300
Cover page :- P.Piratheepan
Prize :- 600.00
ISBN 978 - 624 - 92566 - 0 - 6

சிவஸ்ரீ உருத்திர ஜீவசங்கர் குருக்கள்
ஆதீனகர்த்தா, பிரதம குருக்கள்

அளவெட்டி வடக்கு ஸ்ரீபத்திகாளி சமேத
ஆதி வீரபத்திரர் ஆலயம்

வெள்ளிவிழா மலருக்கு வாழ்த்து

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழையும் பல கலைஞர்களையும் வளர்த்த அளவையூரில் இசைப் பாரம்பரியத்தில் வளர்ந்த திரு.சிவபாதரத்தினம் சிவசிவா அவர்களது பாடல்களைத் தொகுத்து வெளியிடும் ¨தமிழிசைப் பாக்கள்¨ மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

¨கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்¨ என்ற முது மொழிக்கு அமைய அளவெட்டியில் பல கோவில்களை அமைத்து வளர்த்து நம் சந்ததியினருக்கு விட்டுச் சென்றுள்ளனர். அந்த வகையில் திரு.சிவபாதரத்தினம் சிவசிவா அவர்கள் தந்தையாரால் அமைக்கப்பட்ட துண்டிப் பிள்ளையார் வீட்டுக் கோயிலை பக்தி சிரத்தையுடன் பராமரித்து வருகின்றார். துண்டிப் பிள்ளையார் பிரதிட்டா கும்பாபிசேகம் 03.07.2000 இல் எனது தலைமையில் நடைபெற்றது. இவ்வருடம் வெள்ளிவிழா காணுவதையிட்டு பேருவகையடைகின்றேன்.

மலரில் தான் பிறந்த ஊரில் உள்ள கோவில்களின் தெய்வங்கள் மற்றும் ஈழத்தில் பிரசித்தி பெற்ற கோவில்களின் தெய்வங்களை வேண்டி எழுதப்பட்ட வர்ணங்கள், கீர்த்தனைகள், திருப்பள்ளியெழுச்சி, திருவூஞ்சல் அந்தாதி, பல்லவி, காவடிச்சிந்து, திருப்புகழ் போன்ற தமிழிசைப் பாக்கள் இடம்பெறுவது சிறப்பானதாகும்.

தமிழிசைப் பாக்கள் துண்டிப் பிள்ளையார் வெள்ளிவிழா மலர் வெளியீடு சிறப்பாக அமையவும், அவரது இலக்கியப்பணி மேலும் சிறக்கவும் எல்லாம் வல்ல பத்திரகாளி சமேத ஆதிவீரபத்திரப் பெருமானை வேண்டுவதோடு துண்டிப் பிள்ளையார் அவரது ஆக்கங்கங்களுக்கு துணை நிற்கவும் வேண்டி எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

செல்வி.பரமேஸ்வரி கணேசன்

முதுநிலை விரிவுரையாளர்,

இசைத்துறை,யாழ் பல்கலைக்கழகம்

வாழ்த்துரை

திரு.சி.சிவசிவா அவர்களை நான், இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் கற்கும் காலத்திலிருந்து நன்கு அறிவேன். சிறந்த இசை ஞானமும், கேள்வி ஞானமும் மிக்கவர். மிருதங்கம், நாதஸ்வரம் போன்ற இசைக்கருவிகளை வாசிக்கும் திறன் மிக்கவர். பல்கலைக் கழகத்தில் மிருதங்கத் துறையில் படித்துப் பட்டம் பெற்றவர்.

இவர் தனது கன்னி முயற்சியாக ஆதி தாள வர்ணங்களையும், பல கீர்த்தனைகளையும், அளவையூரில் அமைந்துள்ள ஆலயத் தெய்வங்களின் பெயரில் இயற்றியுள்ளார். கீர்த்தனைகள் எதுகை, மோனைப் பொருத்தப்பாட்டுடன் சந்தம் மாறாது அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர பல்லவிகள். வல்லிபுர ஆழ்வார் பெயரில் கீர்த்தனைகள், நல்லைக் கந்தன் வற்றாப்பளை அம்மன், சந்நிதியான், மாவைக் கந்தன், கதிர்காமக் கந்தன் பெயரில் கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். இவற்றைவிட நாகபூசணி அம்மன், நல்லைக் கந்தன் மேல் இராகமாலிகை இயற்றியுள்ளார்.

அளவெட்டி வடக்குத் துண்டிப்பிள்ளையார் திருப்பள்ளியெழுச்சி, திருவூஞ்சல், திருவந்தாதி என்பனவற்றை இயற்றியுள்ளார். எல்லாமே நல்ல மொழியழகுடன் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இவருக்குள் இவ்வளவு எழுத்தாற்றல் அமையப்பெற்றிருப்பதையிட்டு ஆச்சரியம் அடைந்தேன்.

இறுதியாகப் பல தெய்வங்களின் பெயரிலும் காவடிச் சிந்தும், திருப்புகழும் இயற்றியுள்ளார். இவை யாவும் இசை வடிவம் பெற வேண்டும் என விரும்புகின்றேன், அதற்கான முயற்சியை அவர் எடுப்பார். என எதிர்பார்க்கின்றேன். இந்தக் கடின உழைப்பிற்கு எனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அளவெட்டி சங்கீதபூசணம்
V.K.நடராஜா அவர்கள்

வாழ்த்துரை

திரு.சிவபாதரத்தினம் சிவசிவா அவர்கள் எனது மாணவன். என்னிடம் இசை பயின்று நல்ல நல்ல பதவிகளை அடைந்தவர்களில் இவரும் ஒருவர். இவர் தனது சுய முயற்சியாலே வர்ணங்கள், கீர்த்தனைகள், திருப்பள்ளியெழுச்சி, திருவூஞ்சல் அந்தாதி, பல்லவி, காவடிச்சிந்து, திருப்புகழ் முதலியவற்றை இயற்றிப் புது வழியைக் காட்டியுள்ளார்.

அந்தவகையில் எனது மாணவனின் முயற்சியை நான் போற்றுகின்றேன், வாழ்த்துகின்றேன். துண்டிப் பிள்ளையாரின் 25 வது ஆண்டு நிறைவு வெள்ளி விழாவினையொட்டி வெளி வரவுள்ள **“தமிழிசைப் பாக்கள்”** மலர் சிறப்புற கும்பிழாவளையான் அருளை வேண்டுகின்றேன்.

அளவெட்டி நாதஸ்ர இசைவேந்தன் அழகர்சாமி பாலச்சந்திரன் (சுதந்திரன்)

வாழ்த்துரை

திரு.சிவபாதரத்தினம் சிவசிவா அவர்கள் தனது இசை ஞானத்தையும், தமிழ்ப் புலமையும் கொண்டு வர்ணம், கீர்த்தனை, இராகமாலிகை, திருப்பள்ளியெழுச்சி, திருவூஞ்சல், திருவந்தாதி, பல்லவி, காவடிச்சிந்து, திருப்புகழ் போன்ற பாடல்களை இயற்றித் துண்டிப் பிள்ளையாரின் வெள்ளி விழாவினையொட்டி **"தமிழிசைப் பாக்கள்"** என்ற மலரினை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவரது பாடல்களைப் பார்வையிட்டேன். இம்மலரிலுள்ள ஆக்கங்களைச் சகலரும் பயன்படுத்தல் வேண்டும் என்பது எனது விருப்பமாகும். இவரது முயற்சியைப் பாராட்டுவதோடு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வாறான ஆக்கங்களைத் தொடர்ந்து வெளியிடல் வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

அளவெட்டி சங்கீதநாத சாகரம், நாதஸ்வர கலாநிதி இரத்தினம் கேதீஸ்வரன்

வாழ்த்துரை

மதிப்புக்குரிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.சிவபாதரத்தினம் சிவசிவா அவர்கள் தனது இசை ஞானத்தையும், தமிழ்ப் புலமையும் இணைத்து வர்ணம், கீர்த்தனை, திருப்பள்ளியெழுச்சி, திருவூஞ்சல் அந்தாதி, பல்லவி, காவடிச்சிந்து, திருப்புகழ் ஆகியவற்றை இயற்றித் துண்டிப் பிள்ளையாரின் 25 வது ஆண்டு நிறைவு வெள்ளிவிழாவினையொட்டி **"தமிழிசைப்பாக்கள்"** என்ற மலரினை வெளியிடுகின்றார்.

இவரது பாடல்களை நானும் பார்வையிட்டுக் கிரகித்துள்ளேன். இம்மலரிலுள்ள ஆக்கங்களைச் சகலரும் பயன்படுத்திக் கையாளவேண்டும் என்பது எனது விருப்பமாகும். இவரது முயற்சியைப் பாராட்டி எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு தொடர்ந்தும் இவ்வாறான ஆக்கங்களை வெளியிடல் வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

சங்கீத வித்துவான்
பொன்.ஸ்ரீவாமதேவன்
வருகை விரிவுரையாளர்,
யாழ் பல்கலைக்கழகம்

அணிந்துரை

இசைக் குடும்பத்தில் தோன்றிய இந்நூலாசிரியர் தனது இசையாற்றல், லய ஆற்றல், தமிழாற்றல் ஆகிய மூன்றையும் ஒன்று சேர்த்து ஈழத்தில் உள்ள ஆலயங்களில் உள்ள மூர்த்திகள் மீது நூற்றுக்கணக்கான கீர்த்தனைகளையும், வர்ணங்களையும், இசையுலகிற்கு அளித்துள்ளார். இவை ஒவ்வொன்றும் சொற்சுவையும், பொருட்சுவையும் நிறைந்து விளங்குவதோடு தாய் இராகங்களிலும், ஜன்னிய இராகங்களிலும் செய்துள்ளமை பாராட்டற்பாலது.

அளவெட்டி துண்டி விநாயகர், கும்பிழாவளைப் பிள்ளையார், பன்னாலை வரத்தலம் பிள்ளையார், நகுலேசுவரம். திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முனீஸ்வரம், வைத்தீஸ்வரம், பூரணை,புட்கலை உடனுறை ஐயனார், ஆதிவீரபத்திரர், தவளக்கிரி முத்துமாரி அம்மன், தெல்லிப்பழை துர்க்கை அம்மன், சின்னம்மன், வற்றாப்பளை கண்ணகி அம்மன், நல்லூர்க் கந்தன், சந்நிதிக் கந்தன், மாவைக் கந்தன், கதிர்காமக் கந்தன், வல்லிபுர ஆழ்வார். நயினை நாகபூசணி அம்மன் ஆகிய திருத்தலங்களின் மேல் கீர்த்தனைகள் இயற்றப்பட்டுள்ளன.

மேலும் இந்நூலில் திருப்பள்ளியெழுச்சி, திருவூஞ்சல், திருவந்தாதிப் பாடல்கள் துண்டி விநாயகர் மீது இயற்றப்பட்டுள்ளது. தெல்லிப்பழை துர்க்கை அம்மன், தவளக்கிரி முத்துமாரி அம்மன் திருத்தலங்களின் மேல் உற்சவ கால கீர்த்தனைகள் இயற்றப்பட்டுள்ளன. மேலும் இந்நூலில் நவராத்திரிப் பாடல்கள், காவடிச் சிந்து, இராகமாலிகைகள், திருப்புகழ், பல்லவி போன்ற உருப்படிகளும் இயற்றப்பட்டுள்ளன.

இவ்வுருப்படிகள் யாவும் எவரும் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் சொல்லாட்சியுடன் காணப்படுவது சிறப்பம்சமாகும். எமது நாட்டு ஆலயங்கள் மேல் இயற்றப்பட்டுள்ள இப்பாடல்கள் அவ்வவ் ஆலயங்களில் பாடப்படும்போது பக்தர்களுடைய மனங்கள் பக்தி உணர்ச்சியினால் பரவசம் அடைவது உறுதி. மென்மேலும் இந்நூலாசிரியர் சைவ உலகிற்கும், இசை உலகிற்கும் நிறைய நிறைய உருப்படிகள் இயற்றி வெளியிட எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு நல்லாசிகள் வழங்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வடிவேலையா வசந்தகுமார்
பிரதிக் கல்விப்பணிப்பாளர், தமிழ் வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி தெற்கு.

நட்புரை

கலைக்கென தனித்துவமான அளவையூரில் கலைப் பாரம்பரியத்தில் வளர்ந்தவர் சிவசிவா, இசைத்துறையில் பட்டம் பெற்று வடபுலத்தில் ஆற்றுப்படுத்துபவர். கல்வித்துறையில் தனது சேவையை அர்ப்பணிப்போடு ஆற்றுபவர். இப்போது ஈழத்தின் இயற்றமிழுக்கும் தன்னை ஈடுபடுத்தியிருப்பது தனது ஆற்றலின் பல்பரிமாண நிலையினைக் காட்டுகின்றது. இசைத்துறையில் கிடைத்த அனுபவம் இசைப்பாக்களை உரிய நுட்பங்களோடு இராக, தாளத்துடன் வடித்தெடுக்க முடிந்துள்ளது. அவ்வப்போது சில ஆய்வு ரீதியான விடயங்களை பதிவு செய்தபோதும் இவரது இந்தச் செய்யுள் நிலை சார்ந்த இவ் இசைப்பாக்களின் பதிவு காலத்தின் தேவையாகும்.

இசைத்துறை சார்ந்த உருப்படி வகைகளை இனங்கண்டு அவற்றின் இலக்கணங்களுக்கேற்ப நுணுக்கமான முறையில் இசைப்பாக்களைப் படைத்திருப்பது ஈழத்து இசைப்பாக்கள் வருகைக்கு காத்திரமான பங்களிப்பு. கீர்த்தனைகள், வர்ணங்கள் என இசை உருப்படிகளைச் சேர்த்திருப்பது தேர்ந்தெடுத்த சொற்களோடு தூய தமிழில் புதிய சொற்களையும் கையாண்டு படைத்திருப்பது அவரது தமிழ்ப் புலமையின் வெளிப்பாடாகும்.

தனது ஊர், அயல் ஊரென அத்தனை ஊர்களிலும் உறையும் தெய்வங்களுக்குப் பாக்களைப் புனைந்திருப்பது அவரது தெய்வீகநிலை சார்ந்த சிந்தனையின் வெளிப்பாடு திருப்பள்ளியெழுச்சி, அந்தாதி, திருவூஞ்சல், கீர்த்தனை என பல சிற்றிலக்கிய வடிவங்களை இலக்கணத்திற்குள் நின்று பாடியிருப்பது இலக்கிய, இலக்கணப் புலமையின் மற்றொரு வெளிப்பாடு.

ஆக, சிவசிவாவின் இவ் ஆக்க முயற்சி ஈழத்தின் இயல், இசைத்துறைக்குக் கிடைத்த காத்திரமான சொத்து.

சிவபாதரத்தினம் சிவசிவா
(பிரதிக் கல்விப்பணிப்பாளர்)
பிள்ளையார் இல்லம்,
அளவெட்டி வடக்கு

முன்னுரை

அளவெட்டி வடக்கில் வீற்றிருந்து அடியவர் துன்பம் போக்கி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் துண்டிப் பிள்ளையார் 2000.07.03 ஆம் திகதி ஆனி மாதம் பூச நட்சத்திரத்தில் பிரதிட்டை செய்யப்பெற்றது. 2025.06.28 ஆம் திகதி சதுர்த்தியுடன் கூடிய ஆனி பூச நட்சத்திர தினம் 25 வது ஆண்டு நிறைவு தினமாகும். துண்டிப் பிள்ளையாரின் வெள்ளி விழா ஆண்டின் குடமுழுக்கு தினத்தில் என்னால் எழுதப்பட்ட தமிழிசைப் பாடல்களைத் தொகுத்து **"தமிழிசைப் பாக்கள்"** என்ற மலராக வெளிவருவதற்கு துண்டியான் அருள் கிடைத்திருப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.

அளவெட்டியில் எழுந்தருளி அருள் வழங்கும் துண்டிப் பிள்ளையார், ஐயனார், ஆதிவீரபத்திரர், தவளக்கரி முத்துமாரி அம்மன், சின்னம்மன், கும்பிழாவளைப் பிள்ளையார், அழகொல்லைப் பிள்ளையார் மற்றும் பன்னாலை வரத்தலம் பிள்ளையார், தெல்லிப்பழை துர்க்கை அம்மன், கீரிமலைச் சிவன், திருக்கேதீச்சரச் சிவன், நல்லூரான், சந்நிதியான், மாவைக் கந்தன், கதிர்காமக் கந்தன், வல்லிபுர ஆழ்வார், வற்றாப்பளை அம்மன், அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் ஆகிய இறைவர்களை வேண்டி என்னால் அவ்வப்போது எழுதப்பட்ட பாடல்களைத் தொகுத்துத் **"தமிழிசைப் பாக்கள்"** என்ற மலரினை இறைவர்களின் பாதங்களில் சமர்ப்பித்து வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மலரில் தெய்வங்களைப் போற்றி என்னால் எழுதப்பட்ட வர்ணம், கீர்த்தனை, இராகமாலிகை, திருப்பள்ளியெழுச்சி, திருவூஞ்சல், அந்தாதி, சிந்து, திருப்புகழ் ஆகிய தமிழிசைப் பாக்கள் அடங்கியுள்ளன.

இந்த மலரிற்கு வாழ்த்துரைகள் வழங்கிய அளவெட்டி வடக்கு ஆதிவீரபத்திரர் ஆலய ஆதீனகர்த்தா சிவஸ்ரீ உ.ஜீவசங்கர் குருக்கள் அவர்களுக்கும், யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் செல்வி. பரமேஸ்வரி கணேசன் அவர்களுக்கும், சங்கீதபூசணம் V.K. நடராஜா அவர்களுகளுக்கும், நாதஸ்வர வேந்தன் அ.பாலச்சந்திரன் (சுதந்திரன்) அவர்களுக்கும், நாதஸ்வர கலாநிதி இ.கேதீஸ்வரன் அவர்களுக்கும், அணிந்துரை வழங்கிய சங்கீத வித்துவான் பொன்.ஸ்ரீவாமதேவன் அவர்களுக்கும், நட்புரை வழங்கிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வ.வசந்தகுமார் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வு கொள்கின்றேன்.

மலரினை வெளியிட்டு உதவுகின்ற சுவிற்சர்லாந்து பூரண சுவாமிகளின் திருவடிகளைப் பணிகின்றேன். சுவாமிகளின் அருள் வாக்குப் பெற்றமை யான் பெற்ற புண்ணியமே. ஊரெழு பூரண நிலையத்தின் இணைப்பாளர் திரு.V.விஸ்ணுகரன் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வு கொள்கின்றேன்.

மலர் வெளிவருவதற்கு பலவழிகளிலும் உறுதுணையாக இருந்த எனது அண்ணாவிற்கும் (சி.சிவசாமி), தம்பிக்கும் (சி.சிவமயம்), மனைவி, பிள்ளைகள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வு கொள்கின்றேன்.

என்னை வழிப்படுத்தி பல வழிகளிலும் உதவி வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் செல்வி.பரமேஸ்வரி கணேசன் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வு கொள்கின்றேன்.

மலரின் அட்டையினை சிறப்புற அழகாக வடிவமைத்து உதவிய யா/வைத்தீஸ்வராக் கல்லூரி ஆசிரியர் திரு.ப.பிரதீபன் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வு கொள்கின்றேன்.

மலரினைச் சிறந்த முறையில் அச்சுப் பதித்து உதவிய கொடிகாமம் கிங்ஸ் அச்சகத்தினருக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வு கொள்கின்றேன்.

நான் கவிஞன் அல்ல, எனினும் இறைவன் மேல் உள்ள பக்தி காரணமாகவும் தமிழிசை மேல் உள்ள பற்றுக் காரணமாகவும் எனது ஆக்கங்களை நூலாக வெளியிடுவதில் ஆர்வம் கொண்டேன். யாவும் துண்டியான் சித்தமே.

துண்டிப் பிள்ளையாரைத் துதிக்கும் அடியார்கள் அனைவருக்கும் அருள் கிடைத்து இன்பம் சூழ்ந்து எல்லோரும் மகிழ்வுடன் வாழ வேண்டித் துண்டியான் திருவடி போற்றி வணங்குகின்றேன்.

சமர்ப்பணம்

என்னைச் சிறந்த முறையில் வழி நடத்திய
அம்மா (வள்ளிநாயகி),
அப்பா (சிவபாதரத்தினம்)
அவர்களின்
திருவடிகளைப் பணிந்து,
தமிழிசைப் பாக்கள் என்ற இம்மலர்
வெளிவருவதற்கு துணை புரிந்த துண்டிப்
பிள்ளையாரின் திருவடிகளுக்கும், பாக்களை
எழுதுவதற்குக் காரணகர்த்தாவாக விளங்கிய
கலைத்தாயின் திருவடிகளுக்கும், பாக்களில்
போற்றித் துதிக்கப்பெற்ற தெய்வங்களின்
திருவடிகளுக்கும் இம்மலரினைச் சமர்ப்பணம்
செய்து வணங்குகின்றேன்

மலரின் உள்ளே..

- வாழ்த்துரைகள்
- அணிந்துரை
  நட்புரை
- முன்னுரை
- சமர்ப்பணம்
- மலரின் உள்ளே……

1. அளவெட்டி வடக்குத் துண்டிப் பிள்ளையார்
2. துண்டிப் பிள்ளையார் நினைவுப் பதிவுகள்
3. வர்ணங்கள்
4. அளவெட்டி வடக்குத் துண்டிப் பிள்ளையார் பாக்கள்

    4.1 அளவெட்டி வடக்குத் துண்டிப் பிள்ளையார் கீர்த்தனைகள்

    4.2 அளவெட்டி வடக்குத் துண்டிப் பிள்ளையார் திருப்பள்ளியெழுச்சி

    4.3 அளவெட்டி வடக்குத் துண்டிப் பிள்ளையார் திருவூஞ்சல்

    4.4 அளவெட்டி வடக்குத் துண்டிப் பிள்ளையார் அந்தாதி

5. பிள்ளையார் கீர்த்தனைகள்

    5.1 அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் கீர்த்தனைகள்

    5.2 அளவெட்டி அழகொல்லைப் பிள்ளையார் கீர்த்தனைகள்

    5.3 பன்னாலை வரத்தலம் பிள்ளையார் கீர்த்தனைகள்

6. சிவபெருமான் கீர்த்தனைகள்

7. அளவெட்டி வடக்கு பூரணை, புட்கலை உடனுறை ஐயனார் கீர்த்தனைகள்

8. அளவெட்டி வடக்கு பத்திரகாளி உடனுறை ஆதிவீரபத்திரர் கீர்த்தனைகள்

9. அம்மன் கீர்த்தனைகள்

    9.1 அளவெட்டி வடக்குத் தவளக்கிரி முத்துமாரி அம்மன் கீர்த்தனைகள்

    9.2 தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கீர்த்தனைகள்

    9.3 அளவெட்டி வடக்கு சின்னம்மன் கீர்த்தனைகள்

    9.4 வற்றாப்பளை அம்மன் கீர்த்தனைகள்

    9.5 ஏனைய அம்மன் கீர்த்தனைகள்

10. முருகன் கீர்த்தனைகள்

    10.1 நல்லைக் கந்தன் கீர்த்தனைகள்

    10.2 சந்நிதி முருகன் கீர்த்தனைகள்

    10.3 கதிர்காமக் கந்தன் கீர்த்தனைகள்

    10.4 மாவைக் கந்தன் கீர்த்தனைகள

11. ஏனைய தெய்வங்களின் கீர்த்தனைகள்

    11.1 அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் கீர்த்தனைகள்

    11.2 வல்லிபுர ஆழ்வார் கீர்த்தனைகள்

    11.3 வைரவ சுவாமி கீர்த்தனைகள்

12. பல்லவிகள்

13. இராகமாலிகைகள்

14. காவடிச் சிந்து

15. திருப்புகழ்

01

அளவெட்டி வடக்கு துண்டிப் பிள்ளையார்

1. அளவெட்டி வடக்குத் துண்டிப் பிள்ளையார்

இட அமைவு :-

துண்டிப் பிள்ளையார் கோவில் அமைந்திருக்கும் சந்தியினைத் துண்டியடி என அழைப்பது வழக்கமாகும். துண்டியடிச் சந்தி, அளவெட்டி வடக்கு மகாத்மா வீதியில் ஐயனார் கோவிலுக்கு அருகாமையில் உள்ளது.

கோவில் அமைந்ததன் காரணம் :-

திரு.கிருட்ணசாமி சிவபாதரத்தினம் அவர்கள், ஒரு தருணம் அருட்கவி கலாநிதி சீ.விநாசித்தம்பி ஐயா அவர்களைச் சந்தித்தவேளை **"உனது வீட்டுச் சந்தியில் கோவில் தெரிகின்றது பிள்ளையார் கோவில் அமைத்து வழிபடு"** என அருட்கவி ஐயா அவர்கள் அருள்வாக்கு வழங்கினார்.

அருள்வாக்குப் பெற்ற சிவபாதரத்தினம் அவர்கள் வீட்டுச் சந்தியில் பிள்ளையார் விக்கிரகத்தை அமைத்துப் பூசித்து வழிபட வேண்டும் என்ற பெருவிருப்பம் கொண்டார், அவரது மனைவி வள்ளிநாயகி மற்றும் இளைய மகன் சிவமயம் ஆகியோர் இந்தியா சென்று வருகை தந்த வேளையில் மாமல்லபுரத்திலிருந்து பிள்ளையார் விக்கிரகத்தை தருவித்தார்.

பிள்ளையார் குடமுழுக்கு :-

2000.07.03 ஆம் திகதி திங்கட்கிழமை ஆனி மாதப் பூச நட்சத்திர நன் நாளில், அளவெட்டி வடக்கு ஆதி வீரபத்திரர் ஆலய ஆதீன கர்த்தாவும், பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ உ.ஜீவசங்கர் குருக்கள் அவர்களால் பிள்ளையாருக்குக் குடமுழுக்கு செய்யப்பட்டது.

திரு.கி.சிவபாதரத்தினம் அவர்களால் தினமும் அதிகாலை 5.00 மணிக்கு கோவில் மணி ஒலிக்கப்பட்டு பூசை நடாத்தப்பட்டது. 2000.07.03 ஆம் திகதி முதல் 2014.09.23 வரை எனது அப்பாவினால் (திரு.கி.சிவபாதரத்தினம் அவர்களால்) பூசை நடாத்தப்பட்டது. அப்பா 2014.09.23 ஆம் திகதி இறையடி சேர்ந்த பின்னர் என்னால் (சி.சிவசிவா) பூசை நடாத்தப்படுகின்றது.

வருடந்தோறும் ஆனிமாதம் பூச நட்சத்திர தினத்தில் விசேட அபிசேக, பூசைகள் நடைபெறுகின்றன. இதனை அளவெட்டி வடக்கு ஆதி வீரபத்திரர் ஆலய ஆதீன கர்த்தாவும், பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ உ.ஜீவசங்கர் குருக்கள் அவர்களும், அவரது பிள்ளைகளும் நடாத்தி வருகின்றனர்.

இக்கோவில் சந்தியில் அமைந்துள்ளமையினால் அனைவராலும் போற்றி வணங்கப்படுகின்றது. அடியார்களின் துன்பம் போக்கி மகிழ்ச்சியை அருளும் அற்புதப் பிள்ளளையாராக துண்டிப் பிள்ளையார் திகழ்கின்றார்.

துண்டிப் பிள்ளையார்:-

2000 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்ற பின்னர் ¨அளவெட்டி வடக்குப் பிள்ளையார்¨ என்றே அழைக்கப்பட்டார். 2001 ஆம் ஆண்டில் ஒரு நாள் முதியவர் ஒருவர் வருகை தந்து சிவபாதரத்தினம் அவர்களிடம் **“பிள்ளையார் கோவில் துண்டியடி சந்தியில் அமைந்துள்ளமையினால் துண்டிப் பிள்ளையார் என அழைத்தல் வேண்டும்”** எனக் கூறிச் சென்றார். அந்த முதியவரை யார் என அடையாளம் காண முடியவில்லை. அன்றிலிருந்து அளவெட்டி வடக்குப் பிள்ளையார் **“அளவெட்டி வடக்குத் துண்டிப்பிள்ளையார்”** என அழைக்கப்பட்டார்.

துண்டிப் பிள்ளையாரில் ஐயப்ப சுவாமி ஓவியம்:-

மூர்த்தி என்று அழைக்கப்படும் புகழ்பெற்ற அளவெட்டி ஓவியர் திரு.ந.தெட்சணாமூர்த்தி அவர்களால் 2003 ஆம் ஆண்டு கோவில் சுவரில் ஐயப்ப சுவாமி ஓவியம் வரையப்பெற்றது

சுவரோவியம் புனரமைப்பு

திரு.கே.தணிகன் குடும்பத்தினரால் நேர்த்தியின் பொருட்டு 2022 ஆம் ஆண்டு கோவில் முகப்பு சுவரோவியங்கள் **(அளவெட்டி ஓவியர் திரு.ந.தெட்சணாமூர்த்தி அவர்களால் 2003 ஆம் ஆண்டு கோவில் சுவரில் வரையப் பெற்ற ஐயப்ப சுவாமி ஓவியம் தவிர்ந்த ஏனைய ஓவியங்கள்)** புனரமைப்புச் செய்து வரையப்பெற்றது. 2022.08.07 ஆம் திகதி விசேட பூசையுடன் சுவரோவியங்கள் திறந்து வைக்கப்பட்டன. சுவர் ஓவியங்களைப் புனரமைப்புப் செய்து வரைந்தவர் யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தைச் சேர்ந்த ஓவியர் தி.மதிராஜ் அவர்களாவார்.

02

துண்டிப் பிள்ளையார் நினைவுப் பதிவுகள்

துண்டிப் பிள்ளையார் நினைவுப் பதிவுகள்

துண்டிப் பிள்ளையார் நினைவுப் பதிவுகள்

துண்டிப் பிள்ளையார் நினைவுப் பதிவுகள்

துண்டிப் பிள்ளையார் நினைவுப் பதிவுகள்

03

வர்ணங்கள்

தான வர்ணம்

இராகம்: பகுதாரி　　　　ஆ: ஸகமபதநிஸ்　28 இன்

தாளம்: ஆதி　　　　அ: ஸ்நிபமகஸ　ஜன்னியம்

1 4　　/　o　　/　o　　//

பல்லவி

பாமா கா ; கமபம பதநி ப / மபமக ஸா, நி / பா தநீ ஸகம //

ஓங்கா ர. க. . . ண. . ப . . . தியே. ச ர. . ணம் . .

பமகமக ஸகம கமப மபத பத / நிபா த நீ தப / மா கஸா ஸகம //

உ. . .ன் தி. . ரு. . வ. . டி. .யை தி. னம் வண ங். . கி. . னே..ன்

அனுபல்லவி

கமபத நீ பம - ஸ்நிபம கமா ப / தநி பதநி ஸ்நிப / தா நீ ஸ்ா ; //

அ. . . ருள்.. ம. . . ழை பொ. . . ழி. . ய. . . வ. ரு. வாய்

ஸ்நிஸ்க் ம்க்ஸ்நி பதநி ஸ்ா நிபம / கமபதநி பமக / ஸா, கமபதநி //

அ. . . ள. . . வை.. ப். ப. . . தி. . . யி .ல் மே.. வு. . .ம்

முத்தாயிஸ்வரம்

ஸ்ா ; ஸ்நி பதநி பமா கஸா நி / பா தநீ ஸகா / கம பத நீ ஸ்ா //

ஸ்நிஸ்கா ம்க்ஸ்ா நிபா தநிஸ்க் / , ம்ா க்ஸ்நி ஸ்ா / நிபம கமபதநி //

சரணம்

பா தா நீ ; ஸ்நிப மா பதநி / ஸ்ா ; ; ஸ்நி / நிபம க ம ப த நி //

துண் டி வி . நா. . ய. க. . னே. . . அடி யவர்க் கருள் புரியும்

1. பா ; ; மா ; கா ஸா நீ / பா ; தா நீ / ; ஸா கா மா //

2. ஸ்நி பதநி பமக ஸா கமபத நீ / ஸ்நிஸ்க் ஸ்ாநிப / , தநிஸ்ா க்ஸ்நி //

3. பா தநிபமக ஸா கமபத நீ ஸ் / , நிபமா கஸா / மகா மபத நீ //
ஸ்நிபம கஸா கம மப பத தநீ / ஸ்க்ஸ்ா நிபமக / ஸா பமா பதநி //

4. ஸ்ா; க்ஸ் நிப தநி ஸ்நி பம கம / பா ; ; க ம / பதாநி ஸநிஸ்க் //
ஸ்நிஸ்க் நீஸ் பா தநிஸ்ா நிபம / , கஸா கமகப / மா கமா பதநி //
ஸ்நிபமக ஸா நிபமக ஸா பமக / ஸா, நிஸகமப / தநிபா தநிஸ்க் //
ம்ாக்ஸ்நி பாத நிஸ்க் நிஸ்ா, நி / பா, த நீ, ப / மா , கமபதநி //

தான வர்ணம்

இராகம்: ரீதிகௌளை ஆ: ஸகரிகமநிநிஸ் 22 இன்
தாளம்: ஆதி அ: ஸ்நிதமகமபமகரிஸ ஜன்னியம்

1_4 / o / o //

பல்லவி

பா மா பமகரி கா ; ரீ ஸா / நிஸ கரி ஸா நிநி / பா நிநிஸ நிஸா //
மு. ரு. . க.. னே து ணை பு . . . ரிந் த.. ருள் வா.. . .ய்

கக மா கமகரி ஸா, நிநிஸகக / மா நிதம நிநிஸ் / நிதம - கமதபம //
வள் ளி தெய் . வா... னை.... ம. ணா. . . .ள.. னே.....

அனுபல்லவி

நீதம நிநிஸ்ா ஸ்நிநித மா கம / நிநி ஸ்நித - மபம / கரி - கம நிநி ஸ்ா //
நீ. . ல.... ம. . . .யில் வா. . .க. . . ன.. . . னே.. . . . .

ஸ்நிஸ்க் ரிக்ம்ா க்ரிஸ்நித மாக / மப நிதம கமா / கரிஸ - நிஸககம //
மா . . . வை.. க. தி ர. கா.. மம். சந். நி தி மே. .வு.ம்

முத்தாயிஸ்வரம்

கமப மா கரிஸ நிநிஸ கரிஸ நிஸ / பா நிஸ கரி கம / நீதம நிநிஸா //
ஸ்க்ரிக் ம்ாக்ரி ஸ்நித மா கரிஸ / மாகரி ஸகரிக / மா நிதம ககம //

சரணம்

நீ ; ,ததநி தநிதத மகரிக / மா , கமபமக / ரிஸநி ஸகரிகம //
நல். . லை. க. . ந் த . . . னே . அ. . . . ரு. ள்.வா. ய் .

1. பா ; மா ; கா மா கா ரீ / ஸா ; நீ ஸா / கா ரீ கா மா //
2. நீ , ஸ்நி நிதம கமபம கமகரி / ஸா கரி கம பா / நிதம நீதம ஸ் //
3. பமகரி ஸகரிகம நிதம ஸ்நிநித / மா கம பா தம /, நிதம நிநிஸ்நி //
ஸ்ா, ஸ்நித மா நித மா கமநிநி / ஸ்ாக்ரி க்ம்க்ரி / ஸ்நித மகரிகம //
4. ஸ்ா ; ; நிஸ்க்ரி ஸ்நிதம கம / பா , த மா ,க / மா நிநி ஸ்ா க்ரி //
ஸ்ா நிதம கமப மா கரிஸ மகரி / ஸா நிநிஸ பா நி / நிஸ கரி கமநிநி //
ஸ்க்ரி க்ா ம்க்ரி ஸ்ா க்ரிஸ் நீ ஸ்/ நித ம்ா கமப ம / , கரிக ஸகரிக //
மநிநி ஸ்க்ரிக் ம்ாக்ரி ஸ்நிதம / ஸ்நிதமக மபம / கரிக ஸகரிகம //

தான வர்ணம்

இராகம்: கல்யாணி　　　ஆ: ஸரிகமபதநிஸ்　　65 வது
தாளம்: ஆதி　　　அ: ஸ்நிதபமகரிஸ　　மேளம்

| 4 / O / O //

பல்லவி

பா மா கா ; ரிகரிஸ ரீ கரி / ஸா நிஸ ரிக மா / கம பதநி தபம //
சி. வ. பெ . ரு... மா . னே து . . .ணை பு . ரி . . வா..ய்

கமப தா நிதம கநித ஸ்நிதநி த / பம கரி கா மப / மகரி கா மகம //
ந . கு. லே சு. . வ. ர . . ம் மு. னீ சு. வ. ர. ம்

அனுபல்லவி

ஸ்ா ஸ்நிதபம கநி தா கத பா ம / கரி கம பதநி ஸ் / , நீ தா பதநி //
கே .தீ . . . . சு. . வர .ம் கோ . .ணே. சு. .. வ ரம் உறை .

ஸ்ரிக்ரி க்ம்க்ரி நிஸ்ரிஸ் நித நீ / , தா ப மா க ரி / , ஸரிகம பதநி //
ந . . ம . . . சி . . . . வா. ய நா ம ம் உடை . யோ . . னே. .

முக்தாயிஸ்வரம்

ஸ்ா, நிரிக்ரி நீ தப மா கரிஸ / , நிஸரி நீ ஸரி / கமா கமபதநி //
ஸ்ரிக் நீ நிஸ்ரி தா தநிஸ் பா ப / தநி மா கரீஸ /, ரிஸ ரிகமதநி //

சரணம்

நீ ; ; ஸ்நிதபம கா மபத / பா , கமப கம /, ரிகமப தநிஸ் //
உ . . மை . . ம ணாள. னே. அ.. ருள் பு. ரி. வா. ய்

1. பா ; மா கா ; ரீ கா ரீ / ஸா ; நீ ரீ / கா மா பா தா //

2. ஸ்ா, ஸ்நிதப மா கரி கா ரிஸா / கரீ மகா பம /, தபம கமபத //

3. நீ க்ரி ஸ்நிதபம கக மம தத நி / நி ரிரி ஸ்ா நித ப /, மகரி கம பத //
ஸ்ரிக்ரிஸ்ா நிஸ்ரிஸ்ா நிதபா ம / கா ரிஸா கரீ / மக பம தப நித //

4. ஸ்ா ; நிரிக்ரி நிதமகரி ஸநி ஸ / , ரிக மா பதநி / ஸ்நித கமபதநி //
ஸ்ா ரிநீ தபம கா ரிகமபத நி / , தபம கமபத / நீ, ஸ்நி பதநி //
பா தநிஸ் பதநி மபத கமப ரிக / மா கரி ஸா ரிரி / ககமம ததநிநி //
ஸ்ரிக்ம் கரிஸ்நி தபமா கரிஸ /, ரிகமா மபத / நித ஸ்நி ரிஸ் க //

04

அளவெட்டி வடக்கு துண்டிப் பிள்ளையார் பாக்கள்

4.1 அளவெட்டி வடக்கு துண்டிப் பிள்ளையார் கீர்த்தனைகள்

இராகம் :- கம்சத்வனி	ஆ : ஸரிகபநிஸ்	}	29 இன்
தாளம் :- ஆதி	அ : ஸ்நிபகரிஸ	}	ஜன்னியம்

எடுப்பு

அருள்தரும் தலைவா உன்தாள் பணிந்தோம்
கருவினைக ளறுத்து நல்வாழ்வு தந்திடும்

தொடுப்பு

அரச மரத்தடியில் விரும்பி யுறைபவனே
பரமனே ஞானம் தந்து நித்தமு மாண்டிடும்

முடிப்பு

அறுகம் புல்லாலுன்னை அர்ச்சனை செய்தோம்
குறுமுனிக் கருளிய பரமசிவன் மகனே
கறுவமழித் தடியார் வினைகள் தீர்க்கும்
அளவையூர் பதிவாழும் துண்டிப் பிள்ளையாரே

இராகம்:- கிந்தோளம் ஆ: ஸகமதநிஸ் } 8 இன் ஜன்னியம்
தாளம்:- ஆதி அ: ஸ்நிதமகஸ

எடுப்பு

ஆனைமுகனே ஆறுபடையான் அண்ணனே
பானை வயிறோனே எனக்கருள் செய்திடுவாய்

தொடுப்பு

ஆனந்த சொரூபமாய் விளங்குபவனே – எனக்கு
ஆனந்த வாழ்வளித்துக் குறைகளைப் போக்கிடும்

முடிப்பு

ஆனிப் பூசத்திலுறைந் தருள் புரிபவனே
ஞானியர்க் கெல்லாம் ஞானியா யிருப்பவனே
மானிலம் போற்றும் நல்மானிடனாய் வாழ
வழிகாட்டி யருள்வாய் துண்டிப் பிள்ளையாரே

இராகம் :- சண்முகப்பிரியா ஆ: ஸரிகமபதநிஸ் } 56 வது மேளம்
தாளம் :- ஆதி அ: ஸ்நிதபமகரிஸ

எடுப்பு

இன்பங்களை அள்ளித் தருபவனே - என்
துன்பங்களைப் போக்கி ஆறுதலளித்திடுவாய்

தொடுப்பு

இந்திரனுக் கருள கும்பமுனி கமண்டல
மந்திர நீரைக் காவேரி யாக்கியவனே

முடிப்பு

இன்முகம் காட்டி இளையோர்க் கருள்பவனே
அன்பு காட்டுபவர்களின் குறைகள் தீர்ப்பவனே
என் மனக்குறை போக்கி யருள் புரிவாய்
தென்னவன் மகனே துண்டிப் பிள்ளையாரே

இராகம் :- சகானா ஆ: ஸரிகமபமதாநிஸ் 28 இன்
தாளம் :- ரூபகம் அ: ஸ்நிதபமகாமரீகரிஸ் ஜன்னியம்

எடுப்பு

ஈசன் மகனே கரிமுகனே
பாசம் காட்டிக் காத்தருளும்

தொடுப்பு

ஈர விழியோடுன்னைத் துதித்தோம்
தீர வேண்டுமே எம் மின்னல்கள்

முடிப்பு

ஈழ மக்களின் இன்னல் தீர்த்து
வாழ வழிகாட்டி யருள் புரிவாய்
பழவினை போய்ப் படுந்துயர் தீர
கழல் தொழுதேன் துண்டிப் பிள்ளையாரே

இராகம் :- கல்யாணி ஆ : ஸரிகமபதநிஸ் 65 வது
தாளம் :- ஆதி அ : ஸ்நிதபமகரிஸ மேளம்

எடுப்பு

உன் முகம் பாராமலிருந்ததில்லை - உன்னை
என் மனத்திலிருத்தித் தினமும் வணங்குகின்றேன்

தொடுப்பு

உலகிலே தலைசிறந்து வாழவே - வாழ்வில்
பலசுகம் தந்தெனக்கு வழிகாட்டி யருளும்

முடிப்பு

உருமாறி யேங்கிய மாருதப்புர வல்லிக்கு
அருளி ஏழுகோயில் கொண்ட மர்ந்தவனே
கருவினை தீர்த் தெனக்கு நல்வழிகாட்டி
யருள்புரி அளவைத் துண்டிப் பிள்ளையாரே

இராகம்:- தோடி | ஆ: ஸரிகமபதநிஸ் } 8 வது
தாளம்:- மிஸ்ரசாபு | அ: ஸ்நிதபமகரிஸ } மேளம்

எடுப்பு

ஊருக் கெல்லாம் தலைவனே ஆனைமுகனே
பேருவகை யடைந்தோம் உன்தாள் பணிந்தோம்

தொடுப்பு

ஊதுபத்தி கொழுத்தி தூபதீபம் காட்டி
ஓதும் நாமம் சொல்லி வணங்கி நின்றோம்

முடிப்பு

ஊடலறுத்து இன்பம் பொங்கவே உள்ளத்தில்
ஊறு நீக்கித் துன்பம் துடைத்து – சஞ்சலத்தில்
ஊசலாடும் மனக்குறைகள் நீக்கி யருளும்
கைலாச குமாரனே துண்டிப் பிள்ளையாரே

இராகம்:- நாட்டை | ஆ: ஸரிகமபநிஸ் | 36 இன்
தாளம்:- ரூபகம் | அ: ஸ்நிபமகமரீஸ | ஜன்னியம்

எடுப்பு

எனக்கருளும் சித்தி விநாயகனே
தினமுமுன் நாமம் சொல்லிடுவேன்

தொடுப்பு

எளிமை விரும்பும் அடியார்க் கெல்லாம்
ஒளி மயமான வாழ்வை யீந்திடும்

முடிப்பு

எலி வாகனனே யானை முகனே
கிலி போக்கி மகிழ் வளிப்பவனே
ஒலி வடிவான ஓங்கார ரூபனே
கலி போக்கும் துண்டிப் பிள்ளையாரே

இராகம்:- தர்மவதி ஆ: ஸரிகமபதநிஸ் 59 வது
தாளம்:- ரூபகம் அ: ஸ்நிதபமகரிஸ மேளம்

எடுப்பு

ஏனின்னும் தாமதம் ஐயனே
ஏனையவரும் உன்னைத் தேட

தொடுப்பு

ஏழை யடியவர்க்குதவ - அருள்
மழை பொழியும் தும்பிக்கையோனே

முடிப்பு

ஏங்கி நிற்போரின் துன்பம் போக்கி
தாங்கி நின்று எம்மைக் காத்து
பாங்கினில் வாழ வழிகாட்டும்
ஓங்காரனே துண்டிப் பிள்ளையாரே

இராகம்:- மோகனம் ஆ: ஸரிகபதஸ் } 28 இன்
தாளம்:- மிஸ்ரசாபு அ: ஸ்தபகரிஸ } ஜன்னியம்

எடுப்பு

ஐங்கரனே போற்றி போற்றி
சங்கடங்கள் போக்கி யருளும்

தொடுப்பு

ஐந்தொழிலன் மைந்தனே – என்றும்
எந்தனுள்ளத்தி லுறைந்து வாழ்பவன்

முடிப்பு

ஐயம் நீக்கி ஞானம் ஈந்து
பயம் போக்கிடும் ஞான குருவே
நயம் தந்தென்னைக் காத்தருள்வாய்
தயை புரியும் துண்டிப் பிள்ளையாரே

இராகம்:- சாருகேசி
தாளம்:- ஆதி

ஆ: ஸரிகமபதநிஸ் } 26 வது
அ: ஸ்நிதபமகரிஸ } மேளம்

எடுப்பு

ஒருக்கால் தரிசனம் காட்டி யருள்வாய்
தெருவோர மமர்ந்த மகாகணபதியே

தொடுப்பு

ஒருமுறை தம்பிக்காய் ஆனை வடிவாகி
அருகிருந்த வள்ளியிடஞ் சென்ற கரிமுகனே

முடிப்பு

ஒளியாய் ஒளிரும் குருவே - அடியார்க்கு
தெளிவை ஈந்திடும் கணபதியே - வர
மளித்துப் பாவங்கள் போக்கி யருளும்
ஞான முதல்வனே துண்டிப் பிள்ளையாரே

இராகம்:- பகுதாரி
தாளம்:- கண்டசாபு

ஆ: ஸகமபதநிஸ் } 28 இன்
அ: ஸ்நிபமகஸ } ஜன்னியம்

எடுப்பு

ஓங்கார வடிவனே போற்றி – அடியார்
அகங்காரம் போக்கிடும் குணநிதியே போற்றி

தொடுப்பு

ஓசை, ஒளியாய் நின்ற கணபதியே
ஆசை தீர்த்தெமக்கு ஆனந்தம் தந்திடும்

முடிப்பு

ஓமம் வளர்த் தபிசேகம் செய்துன்
நாமம் சொல்லியே அர்ச்சித்தேன்
சேமம் பாரினில் கிடைக்கவருள் புரிந்து
கருணை காட்டுவாய் துண்டிப் பிள்ளையாரே

இராகம் :- மத்தியமாவதி　　ஆ: ஸரிமபநிஸ் } 22 இன்
தாளம் :- ஆதி　　அ: ஸ்நிபமரிஸ } ஜன்னியம்

எடுப்பு

ஔவைக் கருளிய தும்பிக்கையனே - நீ
பௌவியமாய்க் கைலாசம் சேர்த்தாயே

தொடுப்பு

ஔவியம் நீக்கி நற்குணம் தந்திடும்
கௌரி புதல்வனே சேவிதம் செய்கிறேன்

முடிப்பு

ஔவை பாடிய உனை யானும் பாடுகின்றேன்
ஔடவ இராகமாம் மத்தியமாவதியில்
தாண்டவம் ஆடிடும் சிவன் மைந்தனே
தாரும் வெற்றியைத் துண்டிப்பிள்ளையாரே

❖ ஔவியம் - பொறாமை, தீமை

இராகம்:- ஆபோகி — ஆ: ஸரிகமதஸ் / அ: ஸ்தமகரிஸ — 22 இன் ஜன்னியம்

தாளம்:- ஆதி

எடுப்பு

துண்டிப் பிள்ளையாரே என்ன செய்கிறாய்
கண்பாராயோ தமிழ் மக்கள் துயர்தீர்க்க

தொடுப்பு

மேலான தலைவனென்றுனை நம்பியிருந்து
பாலாபிசேகம் செய்கின்றேன் காத்தருள்வாய்

முடிப்பு 1

துன்பம் மேல் துன்பம் மக்கள் படுந்துயரை
கண்டுங்காணாது இருப்பதேனோ ஐயனே
தும்பிக்கை துணையென்று நம்பிக்கை வைத்த
எம்மேல் கடைக்கண் பாராமல் தாமதமேன்

முடிப்பு 2

உனதடிமையென்றே மக்களும் நம்பினர்
தமதடிமையாய்க் கயவருங் கொண்டனர்
எனதடிமையென்று சூரனை வதைத்தனே
கொடுங்கயவரை அழிக்கத் தாமதமேன்

4.2 அளவெட்டி வடக்குத் துண்டிப் பிள்ளையார் திருப்பள்ளியெழுச்சி

கலைகள் சிறந்தோங்கும் அளவையூரில்
கருங்குழ லிசையும், தவிலிசையு மொலிக்க
சிலைபோல் நின் றாவினமும் இரசிக்க
புள்ளினங்களி னினிய குரலிசை யொலிக்க
தொலை தூரத்து ஞாயிறும் மேலெழ
இருளகன்று ஒளி பரவுது ஊரெங்கும்
தலைவனே, சிவன் மகனே துண்டிப்
பிள்ளையாரே பள்ளி யெழுந்தருளாயே

மீனினம் ஒளியிழக்க கதிரொளி பரப்ப
மலரினம் நறுமணம் வீசி மலர்ந்தன
தேனிசை பாடி வண்டினம் திரிந்தன
குருவிகளு மிசைக்க கூவின கோழிகள்
தானியங்களுக் கிறைத் துயிர் கொடுக்க
உழவரும் கழனி சென்றன ரதிகாலை
ஆனிப் பூசத்தில் உறைந்த துண்டிப்
பிள்ளையாரே பள்ளி யெழுந்தருளாயே

மூலதாரமா யமர்ந்த யின்பக் கணபதியே
தொல்லை யகற்றி இன்பம் தந்திடும்
பாலறுகம் புல்லும் எருக்கம் பூவும்
விரும்பும் தொப்பை வயிறுடை பெருமானே
காலனை வென்ற வீர கணபதியே
விரும்பு மடியவர் குறை போக்கும்
ஞாலம் போற்றும் மகோதரனே துண்டிப்
பிள்ளையாரே பள்ளி யெழுந்தருளாயே

என்றும் முதல் வணக்க முடையோனே
சுழியால் குறித் துன்னை வணங்கி
நின்றுங் கிடந்து மிருந்தும் பணிந்தோம்
கருணை யுள்ளம் கொண்ட நிதியரசே
அன்று மின்று மென்று மருள்பவனே
முயற்சி யுடையார்க் கென்று முதவுபவனே
குன்றின் மேலெழுந்தா னாதவன் துண்டிப்
பிள்ளையாரே பள்ளி யெழுந்தருளாயே

ஞான முதல்வா சித்தி கணபதியே
ஒற்றைக் கொம்பனே உமை மகனே
வானவர்க் கெல்லாம் மேலான தலைவனே
துங்கக் கரி முகத்துத் தூமணியே
ஈனர்க்கு மருளுங் கருணை யுடையோனே
எலி வாகனனே முருகன் அண்ணனே
வானம் மெல்ல வெளுக்குது துண்டிப்
பிள்ளையாரே பள்ளி யெழுந்தருளாயே

அரசடி குளக்கரை ஆற்றங் கரையென
பட்டி தொட்டி யெங்கு மமர்ந்தவனே
கரமைந் துடையானே கங்கை பெற்றோனே
தீவினைகளை யழித் தருள் புரிபவனே
பரம் பொருளே முழுமுதலே தரணிதரனே
சித்தி புத்தி ஞான முடையோனே
இரவகல ஒளிபரந்து விடிகிறது துண்டிப்
பிள்ளையாரே பள்ளி யெழுந்தருளாயே

நடன மாடி யற்புதங்கள் புரியும்
  ஆனந்த மருளும் மோதகப் பிரியனே,
விடமுண்ட கண்டன் மகன் கணேசனே,
  துர்க்கா கணபதியே, வரதனே, கணநாதனே
திடமுடன் நம்பியே யுன் திருவடி
  காண விழைந்தன ருன் னடியார்கள்
தொடங்கின காலை மலரத் துண்டிப்
  பிள்ளையாரே பள்ளி யெழுந்தருளாயே

வானவர், தேவர், முனிவர் வணங்க,
  ஆடவர், மங்கையர், சிறுவர் வணங்க,
ஆனந்தமாய் முதியோர், ஏனையோர் வணங்க
  புள்ளினம் வண்டினம் கொடியினம் வணங்க,
தானம் வழங்கி நிதியோரும் வணங்க,
  மகிழ்வோடு ஏழைகளும் போற்றி வணங்க,
ஆனந்த வடிவான அளவைத் துண்டிப்
  பிள்ளையாரே பள்ளி யெழுந்தருளாயே

வாக்கும் பெருகத் தூபமொடு தீபமும்
  காட்டி வணங்கித் தமிழ்மறை யோதினர்
நாக் கினிக்கத் தேனும், மோதகமும்,
  அவலும், சாதமும், படையல் செய்தனர்
காக்கும் கடவுளா யமர்ந்த தலைவனே
  தேடும் அடியவர்க் குறை போக்கும்
மூக்கறையன் கலட்டி மேவும் துண்டிப்
  பிள்ளையாரே பள்ளி யெழுந்தருளாயே

அடியவர்க் கருளும் கோவே போற்றி
யாவர்க்கு மன்பைப் பொழிபவனே போற்றி
கொடியவ ரகந்தை யழிப்பவனே போற்றி
தாள் பணிபவர்க் கருள்பவனே போற்றி
பிடியின் முகத்தை யுடையவனே போற்றி
தும்பிக்கை கொண் டருள்பவனே போற்றி
வடிவழகனே போற்றி போற்றி துண்டிப்
பிள்ளையாரே பள்ளி யெழுந்தருளாயே

4.3 அளவெட்டி வடக்குத் துண்டிப் பிள்ளையார் திருவூஞ்சல்

காப்பு

அருளோங்கு வட அளவெட்டி யூரில்
மண்வளம், நீர்வளம், கலைவளம் நிறைந்து
திருவோங்க அருள் வழங்கிக் காக்கும்
சிவனுமை மகனே ஆனை முகனே
சீரோங்கு அளவை மூக்கறையன் கலட்டி
துண்டியடிப் பதிமேவி யருள் சுரக்கும்
பாரோங்கு புகழ் உன்னூஞ்சல் பாடப்
பிள்ளையாரே நின்பாதம் காப்பதாமே

நூல்

காக்கத் தந்தம், அட்சமாலை, கோடரி,
ரத்னகலசம், கரங்களி லேந்திய கோவே
வாக்கும் மனமும் தூய்மை யாக்க
ஆர்க்கு மருளும் மகா கணபதியே
பூக்கும் மலரைப்போ லானந்தம் மலர
வருள்புரி சித்தி புத்தி ஞானமுடைய
மூக்கறையன் கலட்டி துண்டியடி மேவும்
துண்டிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்

மாதா, பிதா உலகென்று காட்டி
வலம் வந்து மாங்கனி பெற்றவனே
வாதாபி யிலமர்ந் தருள் புரியும்
ஓங்கார பிரணவ வடிவ மானவரே
ஓதாமல் ஒருநாளு மிருக்க வேண்டா
மென்ற ஔவைக் கருளிய கரிமுகனே
மூதாதையர் வணங்கிய கௌரி மைந்தனே
துண்டிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்

சந்திரன், இந்திரன், வானவர் போற்றிய
பிறை சூடிய சந்திரசேகரப் பிள்ளையாரே
சந்தனம், களிமண், சாணம், மஞ்சளினால்
எளிதாய் வழிபடும் மணக்குள விநாயகனே
கந்தன் அண்ணனே செம்பருத்தி, தும்மைப்பூ,
எருக்கம்பூ, அறுகு, வில்வமிலை விரும்பும்
விந்தை புரிந்து வினைகளைத் தீர்க்கும்
துண்டிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்

கரும்பும், இளநீரும், அவரையும், துவரையும்,
சர்க்கரையும், தேனும், நெய்யும், பழங்களும்,
பருப்பும், பயறும், கடலையும், அப்பமும்,
பச்சரிசியும், கிழங்கும், அன்னமும், விரும்பும்
ஒருமுகம், இருமுகம், மும்முகம், ஐம்முகம்
உடைய எல்லாம்வல்ல வேழ முகத்தோனே
விரும்பு மடியார்க ளல்லல் நீக்கியருளி
துண்டிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்

பறவையாய், மிருகமாய், பூதமாய்த், தேவராய்,
ஆணாய், பெண்ணாய் யாவுமாகி நின்றவனே
அறவழி நிற்போர்க்குத் துணை புரிந்தருளும்
இச்சா, கிரியா, ஞானசக்தி யுடையோனே
துறவறம் பூண்ட முனிவர்களும் வணங்கிய
வெயிலுக் குகந்த யோக கணபதியே
முறக்கன்ன னென் றடியா ரழைக்கும்
துண்டிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்

புல்லாங் குழலும், வீணையும், தவிலும்
இசைத்த இசையாளனா யமர்ந்த குருவே
தொல்லை யகற்றி யின்பம் கொடுக்கும்
ஆனந்த மயமான வீர கணபதியே
வல்லப கணபதி, பிள்ளையார் பட்டி,
உச்சிப் பிள்ளையார், சுயம்பு கணபதி,
தொட்ட கணபதியென பெயர் கொண்ட
துண்டிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்

பெருங் கதையாம் பிள்ளையார் கதை
சதுர்த்தி சங்கடகர சதுர்த்தி விரதமிருந்து
வருமடியார் குறைகள் போக்கி யருளும்
மூத்தோன் ஏரம்பன் மகா கணபதியே
உருவமற்ற வுனக்கு பலவுருவம் பலநாமம்
கொடுத்து வணங்கி மகிழ்ந்தோ மையனே
கருவ மழித்து நல்ஞான மளிக்கும்
துண்டிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்

ஐந்துகர ஆனைமுகனே ஆடீரூஞ்சல்
கும்பழாவளை சந்திரசேகரரே ஆடீரூஞ்சல்
தொந்தி வயிறுடையானே ஆடீரூஞ்சல்
அழகொல்லை கற்பகரே ஆடீரூஞ்சல்
கந்தனுக் கருளியவரே ஆடீரூஞ்சல்
வரத்தலம் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்
விந்தைகள் செய்பவரே ஆடீரூஞ்சல்
துண்டிப்பிள்ளையாரே ஆடீரூஞ்சல்

ஓங்குபுகழ் சிவசமய நெறிகள் வாழி
திருமுறையும் திருநீறு மடியவரும் வாழி
ஓங்குபுகழ் மங்கல இசையும் வாழி
ஆவினமும் வளிவளமும் நீர்வளமும் வாழி
தாங்கும் நிலவளமும் கமக்காரரும் வாழி
கொடை தர்மம் வழங்குபவரும் வாழி
எங்கும் நியாயமா யிருப்பவர்களும் வாழி
துண்டிப் பிள்ளையாரே வாழி வாழி

சிவனுமை பாலகன் ஐங்கரனுக்கு மங்களம்
யாவர்க்கும் மேலான விநாயகனுக்கு மங்களம்
அவம்போக்கி யருளும் ஆனைமுகனுக்கு மங்களம்
காத்தருளும் தொப்பை யப்பனுக்கு மங்களம்
குவலயம் போற்றும் பிள்ளையாருக்கு மங்களம்
தமியேனைக் காத்தருளும் கணபதிக்கு மங்களம்
தவமிருக்கு மடியவர்க் கருள்புரியும் அளவைத்
துண்டிப் பிள்ளையாருக்கு மங்களம் மங்களம்

4.4 அளவெட்டி வடக்குத் துண்டிப் பிள்ளையார் திருவந்தாதி

காப்பு

ஓங்கார ரூபமாயத் திகழும் சிவனுமை மைந்தனே
தீங்கு போக்கி யருளும் ஆனை முகத்தோனே
பாங்குட னுனந்தாதி யென் னுள்ளே எப்போதும்
ரீங்காரமா யொலிக்க துண்டியானே நீயென்றுங் காப்பு

நூல்

அறிவாய், செல்வமாய், வீரமா யுயிரா யுலகாய் சிவ
நெறியாய், யாவுமாய் நின்றருள் புரியு மானைமுகனே
செறிவாய்ப் பரந்த தொளியாய் நின்ற மேனியனே
குறியாய் யாவர்க்கு மின்பமளித் துன்பம் போக்கிடவே - 1

போக்கி யருளுமுன் கடைக்கண் பார்வை யெப்போதும்
நோக்கிய வண்ண மிருக்க வென்றுந் துணைபுரிந்து
காக்கும் கருணைக் கடவுளே என்றும்நீ யென்னுள்ளே
நீக்கமற வாக்கிலும் மெய்யிலும் வீற்றிருந் தருள்வாயே - 2

வாய்மை தவறாத பேராள னெப்போதும் சிந்தையில்
தாய்மை யுணர்வும், தெளிந்த ஞானமும், நீதியும்
தூய்மை கொண்ட வுள்ளமும் யாவரும் போற்றும்
நோய்மை நீக்கி யருளும் பேரன் புடையவனே - 3

உடையான் மயிலேறும் பெருமானைத் தம்பியாய் என்றும்
கொடையாளன் அடியார், எளியவர், பணிவா ரனைவருக்கும்
தடையாளன் தீய வெண்ணஞ் செயல்களி லீடுபடாவண்ணம்
கடையாய்க் கிடந்தடியர்க் கெல்லாம் ஒளியாய்த் திகழ்பவனே
- 4

திகழ்மொழி, பாலறுகு, மோதகம் விரும்பும் பிள்ளையாரே
புகழ்பாடிப் பூசித்த ஔவைக் கருளி கைலாசம் சேர்த்த
திருவண்ணாமலை, விருத்தாசலம், திருநாரையூர், மதுரை,
திருக்கடவூர் பிள்ளையார் பட்டி மேவி யாறுபடை வீடுடையானே
- 5

யானே யுன்னைத் தினம் தினம் மனம் வெதும்பி
ஊனே யுருக்கி வருந்தி யுன்தாள் பணிந்து வணங்கித்
தானே யுனக்குத் திருமுழுக்குச் செய்தலங்கரித்துப் பூசித்
தேனே ஈந்தருள்வாய் உலக மாந்த ரின்பம் பொங்க - 6

பொங்கி யெழுந்தது மனமுனது பேரொளி காணத்
தங்குதடை யின்றி பாய்ந்தோடு மாற்றினைப் போல்
உங்கு வந்துன்னடி பணிந்து போற்றும் பேற்றினை
அங்கண்ணுடை தேவி மைந்தனே யருள்வா யென்றுமே - 7

என்று முன்நாமம் சொல்லி வணங்கி நின்றேன்
நன்றே செய்யு மெண்ணங் கொண்டு தலைப்பட்டேன்
வானோ ரேத்தும் மேலான தலைவரே கணபதியே
இன்னுமேன் தாமதம் அருள்வாய் கரிமுகப் பெருமானே - 8

பெருமை, சிறுமை காணப் பேரானந்தங் கொண்டவுன்
அருமை கண்டேன் எப்போது மருளும் இயல்பினனே
தெருவோர மமர்ந் தடியவர்க் கருளும் வேழமுகனே
தருவா யென்று முன்தாள் பணியும் முத்தி யானந்தமே - 9

ஆனந்த நடனமாடும் தில்லை நடராசரைப் போற்றும்
வானவர், தானவர், முனிவர், யோகிகள், அந்தணர்
ஆனவ ரெல்லா முன்னைக்காண வரிசையில் நிற்க
தேனமுதத் தமிழாலுனை பாடுமெனக் கருள வருவாயோ – 10

வருவாய் அரசமரத்தடி விரும்பி யுறையும் பெருமானே
குருவாய் வந்தெனக்குக் கவிஞான மளித்து உனது
திருவாய் மலர்ந் தென்னை வாழ்த்தும் பேறைத்
தருவாய் அளவைத் துண்டியடி மேவும் பிள்ளையாரே - 11

யாவரும் யாவற்றிற்கும் முதல் வழிபடும் சிறப்புடையோன்
தேவரும், முனிவரும், பணிந்து போற்றும் மேன்மையோன்
மூவரின் சிவன் பிரம்மா விட்டுணு அன்பைப் பெற்றோன்
சாவரும் காலம் வென்ற ஆனைமுகனே சரணம் சரணம் - 12

சரவணப் பொய்கையி லுதித்த முருகனுக்கு மூத்தவனே
கரமைந்து கொண்டு திகழும் பிறைசூடிய பெருமானே
கிரகங்களும் தீண்டா துன்தாள் பணிந்து வணங்கினேன்
நரகம் காணா வாழ்வுபெற வருள் புரிவா யரன்மகனே - 13

மகரந்தத் தேனினை விரும்பும் தேனீயண்டும் பூவினை
இகபரம் சுகம் விரும்பும் மடியா ரண்டுவா ருன்னை
மகரந்தத் தேனினால் மகிழும் தேனீபோல் அடியார்
அகம் குளிர்ந் தமைதி பெறவருள் தருவாய் ஐங்கரனே - 14

கரனே தனம் தரும், கல்வி தரும், வீரம் தரும்
அரன் மகனே தளர் வறியா மனம், சுகம் தரும்
பரம் பொருளே தினம் தினம் மகிழ் வுடன் திகழ்
வரம் தரும் உனது அருள் கடைக் கண் பார்வை - 15

பார் போற்றித் துதிக்கும் தொந்தி வயிறு டையான்
ஊர் காக்கத் தெருவோர மமர்ந் தருள் புரிபவன்
சீர் பெற்று வாழ வழிகாட்டிடும் மகா கணபதியே
பார், ஊர் தடுமாறும் நிலை கண்டு காப்பாயே - 16

காப்பாய், வருவாய், தருவாய், அருள்வாய் பெருமானே
கூப்பிடும் மாந்தர் குரலொலி கேட்டுமின்னும் தாமதமேன்
மூப்புடை பெரியோர் அறவழி நின்றோர் வருந்தியுழன்று
தோப்புக் கரணமிட்டு வணங்கி யுன்தாள் பணிந்தனரே - 17

பணிவு, பொறுமை, வாய்மை, நேர்மை, தன்னுறுதி,
துணிவு என்றும் வாய்த்திட நின்கழல் தொழுதேன்
தணிவா யென்மே லேதும் கோபதாப மிருப்பின்
மணியடித் துன்நாமம் சொல்லிப் பூசித்து நின்றேன் - 18

நின்னடி தொழு மடியார் குறைகள் போக்கி யருளும்
தென்னாடுடைய எந்நாட்டவர்க்கும் இறைவன் மகனே
விண்ணோரும், மண்ணோரும் வியந்து போற்றித் துதிக்கும்
கண் மூன்றுடை பெருமான் போற்றும் கணபதியே - 19

பதியே யுன்னருளா லுன்தாள் பணிந்தருள் பெறச் சரணா
கதி யடைந்தேன் நல் ஒழுக்கமுடன் நல்ஞானமும் தந்தாய்
மதி யழகனே சதுர்த்தி, சங்கடகர சதுர்த்தி, பெருங்கதை
யதில் விரதமிருந்து போற்று மடியார்க்கு அளிப்பாய் எந்நிதியுமே
- 20

எந்நிதியும் பெறவுன் கடைக்கண் பார்வை கிடைத்தென்
சந்ததி நல்ஞானமும் ஞாலம்போற்றும் குணமும் வாழ்வும்
உந்தனைப் போற்றி வணங்கும் பேற்றினையும் எடுபிறப்பெலாம்
தந்தருளப் பெற்றோரை நினைந்துன் பாதம் பணிந்தேன் - 21

பணிந்தேன் உன் மலர்ப் பாதம் பணிந்த பின்னே
தணிந்தேன் உன் கடைக்கண் பார்வையின் பின்னே
கணித்துன் னருள் மழை எனக்கு கிடைத்த பின்னே
துணிந்தேன் உன்னருளாலென் சந்ததி வாழு மெழு பிறப்பும்
- 22

பிறப்பின் நோக்க மெய்த முயன்றுனை மனமிருத்திப்
புறத்துட னகத் தூய்மையுடன் செய்தேன் காரியங்களை
அறவழி நின்று செல்வதின் துன்பம் தொடரா வண்ணம்
சிறப்புடை எம்பொருமானே நிற்க என்றும் துணை - 23

துணையாய் நிற்குமுனக் கென்ன கைம்மாறு செய்திடுவேன்
அணையாய் நின்றாய் வருமிடரும் துன்பமும் போக்கவே
கணையாய் நின்றேகினாய் துயர்துடைத் தின்பம் தந்திட
திணை யிரண்டிற்கும் காவலாய்த் திகழும் வேழ முகத்தோனே
- 24

முகம்மாறிய மாருதப்புரவல்லி மீண்டாள் நகுலேசுவர ரருளால்
அகமதிலிருந்த வுணர்வை நீக்க எழுப்பியவுன் ஏழாலயங்கள்
புகழ்பரப்பி அடியார்க் கெல்லாம் குறைபோக்கி அருள்புரியும்
இகமதில் நடக்கு மதிசயங்கள் என்றும் நிலைத்து நிற்கவே
- 25

வேலவனுக் குதவ உருமாறி யானையாகி வந்தருளிய
ஆலமுண்ட கண்டன் மைந்தா வேண்டுவார் வேண்டும்
ஞாலமதில் பொருளும், சுகமும், நல்ஞானமும் பெற்றிட
மூலதார மூர்த்தியே நீயென்று மிருப்பாய் துணையாக - 26

யாகம் செய்தனர் ஒருபால், நீராட்டி யலங்கரித்தனர் ஒருபால்,
பாகம் செய்து படைத்தனர் ஒருபால், பூசித்தனர் ஒருபால்,
தேகம் சுகமொடு இருக்கப் பிரார்த்தித்தனர் ஒருபால், கரு
மேகம் வரவேண்டினர் ஒருபால் யாவும் நடப்பதுன் திருவுளமே
- 27

திருவே யென்மனத்தி லென்றும் அமர்ந் தருள்பவனே
மருக் கொழுந்தே, முத்தே, பவளமே, வைரமே, கற்பக
தருவே, காமதேனுவே! புல்லாய், பூண்டாய், யாவுமாய்
இருப்பவனே உனதன்பு என்றும் யான்பெற்ற தவப்பயனே
- 28

தவளக்கிரி மேவி யருளும் முத்துமாரி அன்பைப் பெற்றவா
அவம் போக்கி இன்னருள் புரிகின்ற துண்டியடிப் பெருமானே
குவலயம் போற்றித் துதிக்கும் கலிதீர்க்கும் ஒற்றைக்கொம்பனே
கவலை, மனக்குறை, நோய்பிணி போக்கி யருள் பிள்ளையாரே
- 29

பிள்ளையார் நாமம் ஒதுவோர்க் கில்லை எந்நாளும் துன்பம்
துள்ளும் பிள்ளைகளும் விரும்பும் நர்த்தன மாடும் வேழனுக்கு
எள்,தேன், கரும்பு, இளநீர், அவல், மோதகம், சாதம், பாலறுகு,
வெள்ளெருக்கி லொன்றை வைத்தோதுவார்க் கின்ப மென்றும்
- 30

என்றும் நின்தாள் பணிந்து போற்றிப் பூசித்து நின்றேன்
குன்றும் பக்தியும், பணிவும், அர்ப்பணிப்பும் வளர்ச்சிபெற
கன்றும் தாயும் தின்றும், குடித்தும் என்றும் மகிழ்வுடன்
நின்றும், இருந்தும், கிடந்து முன்தாள் வணங்கும் பேறடைய
- 31

பேறு முன்னருளே, உன்னருளா லுன்தாள் போற்றி வணங்கும்
பேறு பெற்றேன் என்று முன்நாமம் சொல்லி யுன்புகழ் பாடும்
பேறு பெற்றதினா லுன்னைத் தினமும் பூசித்துன் தாள்பணியும்
பேறு என்று மானந்தம் தந்தென்னை ஆற்றியது துண்டியானே
- 32

துண்டிக்க வேண்டினேன் பொறாமை, சினம், மும்மலங்களை
கண்டிக்க வேண்டினேன் தீயவழி செல்லின் நல்வழி திரும்ப
திண்டிமுகனே நினைந் துன்னை வழிபடின் கிடைக்கு மென்றும்
உண்டி, உடை, உறையுள், நீர், வளியுட னானந்த வாழ்வுமே
- 33

மேன்மை கொள் சைவநீதியு மறமும் தழைத்தோங்க
வான் பொழியும், கழனி செழிக்கும், மாந்தர் வாழ்வுயரும்,
கோன் உயரும், நாடு சிறந்தோங்கும் ஏனையவுயிர்கள் யாவும்
மேன்மையுடன் வாழும்! சைவநீதி மேன்மையுறு முன்னருளாலே
- 34

உன்னழகு, உன்கருணை, உன்னருள், உன்னுறுதி நிலை,
என்று மானந்தநிலை கண்டானந்தம் கொண்டேன் உலகத்
துன்பங்கள் நீங்கி, இடர் களைந்து இன்பம் பொங்க வென்றும்
உன்நாமம் சொல்லி உன்புகழ் பாடிப் பணிந்தால் போதுமே
- 35

போதும் துன்பம் வேண்டு மென்றும் குறையா யின்பம்
ஓதும் உன்நாமம், புகழ், அற்புத மென்றும் போக்கும்
தீதும், மனக் குறையும், கவலை யெல்லாம் வேண்டும்
சூதும் வாதுமில்லா உன்தாள் பணியு மானந்த வாழ்வு - 36

வாழ்வாங்கு வாழும் பேற்றினை நல்கு முன்னருளும்
வீழ்ந்தாலு மென்று மீண்டெழக் காக்கு முன்கருணையும்
கீழ்ப்படிந் துன்னைப் போற்றுவார்க்கு ஈந்தருளு முன்னன்பும்
பாழ்நரகக் குழிக்குச் சென்றழுந்தலை யென்றும் தகர்த்திடுமே
- 37

தகதகவென ஒளிருமுன் திருமேனி யழகும், சடாமுடி தரித்த
முகவழகும், தும்பிக்கை யழகும், மகிழ்ச்சி பொங்கி வழியுமுன்
அகவழகும், தொந்தியழகும், நடையழகும் மேலான தலைவனாய்
திகழழகும், பெரும் புகழழகும் உன் தனித்துவப் பேரழகே
- 38

பேரும், புகழும் உந்தனக்கே என்கடன் பணி செய்தலே
ஊரும், உலகும் போற்ற வாழ்தலும் உன்னருள் நிறைவாலே
சீரும், திருவும் சுகமும் நல்வாழ்வும் கிடைப்பது முன்செயலாலே
வேரும், விழுதும் வாழ வெண்ணிக் கவலையுற்றேன் காப்பாயே
- 39

காப்பென்றும் உன் செயலாதலால் சுழிபோட் டனைவரும்
கூப்பித் தொழுதேத்தி யாரம்பிப்பர் தினமும் வேலைதனை
கூப்பிட்டவர்க் குதவும் பெருமகனே முருகன் அண்ணனே
காப்பிட் டருள்வாய் ஊரும் நாடும் உலகேழும் சிறக்க - 40

சிறக்கும் என்றும் உன்தாள் பணிந்து போற்றுவார் வாழ்வு
சிறந்த ஞானமும் நல்லொழுக்கமும் தந்தெம்மை யாளும்
சிறுவரும் விரும்பும் தொந்தி வயிறுடை நடனப் பெருமானே
சிறுமை நீக்கி வரும் துன்பம் போக்கி யருள் பொழிவாய் - 41

பொழில் சூழ் நடுவே உச்சி மலையி லமர்ந் தருளும்
எழில் கொஞ்சும் திருமேனி, தும்பிக்கை உடையோனே
செழிப்பாய் என்றும் மக்கள் வாழ்ந்திட, குறைகள் நீங்க
அழிப்பாய் அதர்மத்தை என்றும் தர்மம் ஓங்கி வளர - 42

வளர்தலும் தேய்தலும் நடப்பது உன் னருளாலே
வளர்தல் கூடுவதும் தேய்தல் குறைவதும் உன்னருளே
வளர்பிறை சூடிய வேழன் தாள் பணிந்தாள் பெறலாம்
வளர்தல் கூடுவதைப் பெறும் பேற்றினை என்றும் - 43

என்றும் குன்றா வழகுடன் திகழும் பிள்ளையாரே
என்றும் உன்நாமம் சொல்லும் பேறு பெற்றேன்
என்றும் உன்நாமம் சொல்லும் பேறினைப் பெற்றதால்
என்றும் ஆனந்தமாய் வாழும் பேறினைப் பெற்றேன் - 44

பெற்ற தாயும், தந்தையும் வழிகாட்டித் தினமுனை வணங்கும்
பெற்ற பேறினால் உன்நாமம் சொல்லி, உன்தாள் பணிந்து
பெற்ற உன்னன்பும், சுகமும், தனமும், கல்வியும், வலிமையும்,
பெற்ற வருளால் வருந் தடையும், துன்பமும் அகன்றோடும்
- 45

அகன்ற செவியும், ஒற்றைத் தந்தமும் நீள் விழியும்
அழகிய தும்பிக்கையும் திருநீறு தரித்த நெற்றியும்,
அபய கரமும், தொப்பை வயிறும், ஒளிபடர் மேனியும்,
அடியவர்க் கெல்லாம் துன்பம் போக்கி இன்பம் தருவனவே
- 46

இன்பம் பெருகும் என்றும் ஓதுமுன் நாமத்தால்
கன்மம், வினைகள் அகலும் உன்தாள் பணிவதால்
வன்மம் நீங்கி நித்திய சுகம் கிடைக்கும்
என்றும் உன் கடைக்கண் பார்வை அருளாலே - 47

பார் போற்றும் உன் வீரமும் பேரொளி யழகும்
கூர் விழியும் ஒற்றைக் கொம்பும் எப்போதும்
நேர் கொண்டடியார் உலகில் வாழ்வாங்கு வாழ
சீர் செய்து அருள் புரிந்து துணை நிற்குமே - 48

துணை செய்யும் அடியவர்க் கென்றும் உனதன்பு,
இணையான சக்தி, புத்தி கிடைப்பதால் வையகத்
திணை யிரண்டும் உன்மீது கொண்ட பேரன்பு
அணை கடந்த வெள்ளம் போல் பாயுதங்கே - 49

பாயும் ஈரேழு புவனங்களுக்கும் உனது புகழ்
தாயும், தந்தையும் தந்த பேறினா லென்றும் குறையா
ஈயும் குணமுடை வள்ளலே வேழனே உலகென்றும்
நோயும் நொடியுமின்றி வாழத் தருவாய் அருளே - 50

அருள்நிறை துண்டியான் திருவடிகள் போற்று மடியார்
மருள் நீக்கி ஞானமீந்து ஆனந்த வாழ்வு வாழ
பொருள், சுகம், உற்றதுணை, சிறந்த மக்கட்பேறு
அருளி யென்றும் அருகிருந்து காத்து நிற்பான் - 51

காத்து நின்றனர் அடியார் உன் தரிசனம் காண
சாத்தா கலட்டி மேவும் ஐயனார் அருகிருந்து
ஏத்தும் அடியார்க் கருளும் சிவனுமை மகனே
காத்துப் பூத்த கண்களுக்குக் கொடுப்பாய் காட்சி - 52

கொடுப்பது, வருவது, நிலைப்பது, அழிவது யாவற்றையும்
விடுவதும், தடுப்பதும் உன்னருளென அறிந்தவ ரென்றும்
எடுப்பது, முடிப்பது, தவிர்ப்பது யாவற்றையும் விட்டு
இடுக்கண் வரும் யாவர்க்கும் கொடுப்பர் மனமுவந்து - 53

மனம் மகிழ, இருள் நீங்கி தெருள் பெருக, வறுமை நீங்கி
தனம் பெருக, இனிமை பொங்கி வாழ்வு மலர, கருணை யுள்ள
இனம் பெருக, கவலை, சினம், பொறாமை நீங்கி வேழனே
தினம் உனது அழகு கண்டு புகழ் பாடிட அருள் தருக - 54

தரு மென்றும் குன்றாச் செல்வமும் சிறந்த வாழ்வும்
திருவோடு ஏந்தும் சிவன் மகன் வேழமுகன் அன்பு
தெருவோரம், மரத்தடி, ஆற்றங்கரை, குளக்கரையி லமர்ந்து
அருள் வேண்டி வருமடியார்க் கவன் திருவடி காப்பு - 55

காப்பிட்டு பிள்ளையாரைத் தொழுது தொடங்கும் காரியம்
நோப்பட்டு இருப்பினும் சிறப்புடன் ஆகும் எப்போதும்
தோப்புக் கரணமிட்டு வணங்கி இன்னல் போக்கக்
கூப்பிடு மடியார்களின் குரலுக் கிசைவா னென்றும் - 56

இசைக்கு நடனமாடி மகிழும் விநாயகனைக் கண்
மிசை யவனைப் போற்று வோர்க் கென்றும் விண்
மிசை யின்பமும் இவ்வுலகச் செல்வமும் ஈவான்
வசைபாடு மெண்ணத்தைக் கருக்கும் தீயுமாவான் - 57

தீராப்பிணி தீர்க்கும் அருமருந்தென்ன பிரணவன் நாமம்
ஆராதனை செய்தவன் நாம மோதுவோர்க் கில்லை தீங்கு
நாராயணன், சிவன், விண்ணோர், உலகோர் போற்றும் பிள்ளை
பாரா முகமின்றி யருள்வா னடியா ருள்ளமதில் குடிகொண்டு
- 58

குடி உயரும், வரப் புயர்ந்து நீர் உயர்ந்து மழை பெய்ய
இடி முழங்கி வான் பொழிய வேண்டு மென்று மவனருள்
பிடி முகத்து சிவனுமை மகனருள் வரும் நேர்மையுடன்
அடி பணிந்து வாய்மை, தூய்மையுடன் நடப்போர்க்கு - 59

நடமிடும் பாதன் விரும்பும் பாலகணபதியே, மூலாதாரனே
சுடரொளியே என்றும் பேரானந்தமாய்த் திகழ்பவனே வரு
மிடர் களைந் தென்று மானந்தம் தந்து காத்தருள்வாய்
திடமின்றி அல்லலாடும் மனமதை தெள்ளத் தெளிவாய் - 60

தெளிந்த ஞானமும், நல்லொழுக்கமும், சுகமும், குறையா
வளியும், உணவும், உடையும், உறையுள்ளும், பொருளும்,
எளிமை மிக்க தூய வாழ்வும், பகமையில்லாச் சிறந்த நட்பும்,
துளியும் குறையா மனமகிழ்வும் கிடைப்பதுன் திருவுளமே
– 61

உளமார நினைந்துன் புகழ்பாடிப் பாமாலை சாத்தும் பேறும் மன
மிளமை குன்றா திடமும், உன்னழகு கண்டு மகிழும் பேறும்,
வளம் கொழிக்கும் நல்நாடு மதி லானந்த வாழ்வு கொண்டு
விளங்கும் மக்களும், புரிதலோடு வாழும் வாழ்வும் தாரீர் - 62

தாவும் மனம் நிலையாய் நிற்க வுன்நாம மென்றுந் துணை
பூவும், பாலறுகும், வெள்ளெருக்கும், கரும்பும் மிளநீரும்,
தூவும் வாசனைப் பொடியும், பிள்ளை விரும்பு முணவு
யாவும் படைத்தவன் நாமமோதிப் பெறலாம் நிலைத்த மனம்
- 63

மனம் நினைக்கும் காரியங்கள் யாவும் சிறந்ததா யிருக்க
தினம் தினம் நிகழ்வன யாவும் இன்பம் பெற்று விளங்க
சினம், பதட்டம், நோய்பிணி நீங்கி சுகவாழ்வு பெற்றிட
இனங்கள் யாவுமொன்ற வேழன்தாள் பணிதல் போதுமே
- 64

போதுமுன் தாமதம் தடுமாறும் மாந்தர் நேர்வழி யின்றி
தீதுவழி போகாமல் நல்வழி காட்டியுன் அருள்தர வாராய்
மோதும் மாந்தர் கூட்டங்கள் குறை போக்கி இவ்வுலகு
பாதுகாப்பாய் வலம்வரத் துணை யென்றும் உன்வருகை - 65

வருமடியா ருன்புகழ் பாடித் துதிப்பதும் குறைநீங்கி யுன்
னருள் கிடைக்கு மென்ற திண்ணமு மென்றும் உன்முகம்
தருமழகைக் கண்டானந்தம் கொள்வதும் ஒளியாய்த் திகழக்
குருவாய் வருவாய் தருவா யருளை அடியார் மனம் நெகிழ
- 66

நெக்குருகித் தொழுமடியா ருள்ளம் மகிழ்ந்து சிறப்புடன்
வையகத்தில் வாழ்வாங்கு வாழத் துதிக்கையான்
துக்கம் போக்கி சுகம்தந்து செல்வங்க ளனைத்து மீந்து
எக்காலமும் துணை புரிந் தடியாரைக் காத்து நிற்பான் - 67

நிற்கதியாய் நிற்பவர்க் குதவும் மாந்தர்க் கெல்லா மென்றும்
பற்றும், பாசமும் காட்டி யருள் புரிவான் கொம்பன் அவன்
நற்பெயர் தந்து, அல்லல் போக்கி ஆனந்தமாய்த் தரணியில்
வற்றாச் செல்வமுடன் நீடுழி வாழக் காட்டுவான் வழி - 68

வழிசொல்லு மிறை நூல்கள், தந்தனர் அருளாளரும் சிறந்த
விழிப்பூட்டும் நூல்கள், நல்வழி யிருக்க யாம் நிலைதடுமாறி
பழிக்கே சென்று செய்த பாவங்க ளெம்மை பாழ் நரகக்
குழியில் சென்று அழுந்தும் துன்பத்தைக் கொடுக்கும் - 69

துன்பம் நீங்க, அழுந்தல் தரும் பாழ்நரகம் தவிர்த்து
இன்பம் பொங்கி இல்லறம் சிறந்து மகிழ் வாழ்வு வாழக்
கன்மம் நீங்கி எடுபிறப்பெல்லாம் இறையருள் சித்திக்க
தென்னவன் மகன் துண்டியான் திருவடி பணிந்தா லாகுமே
- 70

ஆகும் வறுமை நீங்கி செழுமை ஐங்கரனேந்து முண்டியால்
வேகும் தீய செயலால் மற்றோர் தூற்றும் போது மனம்
பாகும், பருப்பும், பாலும், தேனும் விரும்பு மவன் நாமத்தால்
போகும் கன்மம், தீயசெயல், அழுக்காறு, பொறாமை யாதும்
- 71

யாதுமாகி நின்ற, ஓருருவம், ஓர்நாம மில்லாப் பெருமானை
நாவும் சொல்லும் நாமங்கள் பல, அடியார் விரும்பி மனதிற்
காவும் அழகு வடிவங்களைக் கொள்ள விரும்பி யவனும்
மேவு மிடமெலாம் பலவடிவங்கள், பலநாமங்கள் கொண்டான்
- 72

கொண்டை முடியலங்காரி மகன் துண்டியான், இலாதார்க்குத்
தொண்டு செய்யு மடியவர்க் கிரங்கி யருள்வா னென்றும்
விண்ணோர், தாழ்ந்தோ ரேதும் பாராத் தொண்டை ஔவையும்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதேயென மொழிந்தாள்
- 73

மொழி யுன்புகழ் பாடவும், மாந்த ரொன்றவும் நீயீந்தது உன்
விழியழகு, முகவழகு, நடையழகு, பேரானந்த நிலையினை
மொழிகளில் சிறந்த தமிழால் பாடிடக் கிடைத்த வரமென்னை
இழிநிலை போகாது மேல்நிலை செல்லக் கிடைத்த தவம் - 74

தவப் பயனால் கர்வம் கொள்ளலது சீரழித் தெமக்கு
அவமதைத் தரும், தெய்வ சினத்திற் காளாக்கும்
குவலய வாழ்வு சிறக்க தன்னடக்கம், அவையடக்கம்,
அவன் திருவடி பணித லென்றும் மேன்மை தரும் - 75

மேன்கொள் சைவநீதி சிறக்க சிவமைந்த னருளால்
வான் பொழியும், மண் சிறக்கும், உழவர் முயற்சி
வீணாகாது வேளாண்மை பெருகும், மகிழ்வர் உழவர்,
மேன்மை பெறும் மக்கள் வாழ்வுயரு முலகெலாம் - 76

உலகேழு மாளு மொற்றைக் கொம்ப னழகைக் காண
தலம் சென்று வணங்கு மடியார்க் கென்றும் தருவான்
நலமும், விரும்பிய சுகவாழ்வும், எடுபிறப்பெலாம் தரும்
பலமொடு குலவாழ்வின் சிறப்பென்றும் பணித லவன்தாள் - 77

அவன் தாள் பணிந்தபின் விலகிடு மிடுக்கண் யாவும்
இவன் எந்நோற்றானோ வென மாந்த ரெல்லாம் வியக்க
சிவன் மகன் துண்டியா னருள் கொடுக்கும் வாழ்வில்
புவன மெங்கும் ஓங்கும் புகழுடன் சிறந்த வாழ்வுமே - 78

வாழும் வழிகாட்ட அற்புதங்கள் புரிந்தானவன் புவனம்
சூழும் மாயை போக்க வதஞ்செய்தான் சூரனை உல
கேழும் சீருடன் வாழ விரும்பும் தும்பிக்கையா னடியார்
வீழும் போது தாங்குவா னென்றும் துணை யிருந்து - 79

இருளகற்றி ஒளி பரப்பும் துண்டியான் முகவழ கென்றும்
வரும் வினைகளைச் சூரியனைக் கண்ட பனிபோலாக்கும்
இரு சக்தியாலவன் உலகிற்கீயும் செல்வமும், ஞானமும்
வரும் அறியாமை, வறுமை நீக்கித் தரும் சுகவாழ்வு - 80

சுகம்பெற மாருதப்புரவீக வல்லி யமைத்து வழிபட்ட
இகமதின் புகழ் கும்பிழாவளையான், அழகொல்லையான்
பகலோன் வரத்தலத்தான் அருகிருந் தருளும் துண்டியான்
அகத்தூய்மை யுடையார்க் கருகி லிருப்பா னென்றும் - 81

இருந்தனர் நம்பி யடியா ரென்றும் துண்டியானை
வருந்தினர் மனம் வெதும்பி ஊனுடம் புருக
கருதினர் தாள் பணிந்தாள் பறந்தோடும் துன்பமென
குருவாய் வந்தானவன் நம்பு மடியார் துன்பம் போக்க - 82

போக்கும் துன்பம், மனக்குறை, வறுமை யாவற்றையும்
காக்கும் தெய்வம் துண்டியான் திருவடி துதிப்போர்க்கு
தாக்கும் மற்றோர்க்கு தீங்கு செய்ய நினைத்த லொன்றே
நீக்கு மின்னலை அவன் முன் யாவரும் சமமெனல் - 83

யாவரும் ஏத்து மவனழகு கண்டா லோடும் துன்பம்
யாவரும் கேளீரென நடப்போரக் கென்று மின்பம்
யாவரும் பாரினில் மகிழ்வுடன் திகழ முனிவரும்,
தேவரும் போற்றும் துண்டியான் திருவடி தொழுமின் - 84

மின்னும் பொன்போ லொளிக்கு மவன் கண்ணழகும
வன்பொற் திருவடி யழகும், நடை யழகும், தோளழகும்,
புன்னகை யழகும், நடனமாடு மழகும், முடியழகும்,
இன்முக வழகும் காணாத கண்ணென்ன கண்ணே - 85

கண்டில ரென்று மவன் பேரோளி, பிறர் நலன் பாராதார்
விண்டில ரென்று மவன் புகழ், மகிழ் வாழ் வறியாதார்
பண்டு தமிழா லவன் புகழ் பாடுவதும், பேரொளி காண்பதும்,
தொண்டு செய்தடியார்க் குதவலும் யாம் செய் புண்ணியமே
- 86

செய்வன யாவும் சிறக்கும் இறை பக்தியுட னெனில்
உய்யு மவனருளா லெக்காரியமும், ஏது மிடர் வரின்
தெய்வ மருகிருந்து துணை செய்யு மென்றும், யாம்
எய்வன தீயன வெனிலவை வீழு மெம் தலைமேல் - 87

தலை முதல் திருவடி வரையுன் னழகு கண்டு வியந்தேன்
கலையாளும், மலையாளும், அலையாளும் வியப்பருன்னழகை
சிலையாக நின்ற வுன்னைக் காணத் துடிக்கிறது நெஞ்சம்
அலைமோது மென் மனம் மகிழத் தருவாய் காட்சியே - 88

காட்சி கண்டேனென் மனத்திலுன் பேரழகை, உலகிலுன்
மாட்சி யோங்க, சீரும், திருவும் பெற்று மாந்தர் வாழ்வு
நீட்சி பெற்று உவகையோ டிருக்க வையகமெலாமுன
தாட்சி விளங்க, சைவநீதி பரவும் வகை செய்குவாய் - 89

வாய்மை தவறா மொழிகளா லண்டும் இறையரு ளென்றும்
பொய்மை யென்றும் கூனிக் குறுக்கும் தன் னெஞ்சை
தாய்மை யெண்ணும் தன்பிள்ளை அவையத்து முந்தி இருக்க
பொய்மை யில்லா வாய்மை யிருத்தும் அவையத்து முந்தி
- 90

முந்தி யாம்செய் வினைகள் அகலும் நேர்வழி நின்று
தொந்தி வயிறுடையான் திருவடி பணிந்து நின்றால்
அந்தி, பகல் போல் இன்பம், துன்பம் சுழல் சக்கரம்
புந்தி யெந்நாளும் செய்யும் நிற்க, துன்பத்திலும் நேர்வழி - 91

வழிக்குத் துணை செய்யு மென்று துண்டியா னருள்
அழிக்கும் தீயது செய்யின் பிறர்க்கு துண்டியான் சக்கரம்
பழிக்குத் துணை போவாரை யழுத்தும் துண்டியான் சினம்
குழிக்குச் செல்லலைத் தடுக்கும் நன்று செய்யின் அவனன்பு
- 92

அன்பினா லாகும் வேழமுகன் தரிசனம் காணல், அவன்
புன்சிரிப்புத் தரும் மன அமைதி, சுமையில்லா மகிழ்வு
கன்மம் நீங்கச் செய்யும் துணை யென்று மவன் தரிசனம்
அன்பு கிடைக்கும் மாந்தர் குதவித் துன்பம் துடைக்க - 93

துடைத் தெறியு மனைத் தல்லல் களையு மன்புநெறி துடி
யிடையா ளரைப் பாகம் கொண்ட சிவன்நெறி அன்புநெறி
சடை முடியான் காட்டும் சைவ நெறி தவறா துண்டியான்
தடைகளைத் தகர்த்துக் காப்பா னன்புடை மாந்தரை - 94

மாதவம் செய்தல் வேண்டு மவனருளா லவன்தாள் போற்ற
பாதகம் செய்வோ ரென்று மடையா ரவன்தாள் பணிதலை
மோதகம் விரும்பு மவனருளால் பெறலாம் மாதவம் என்றும்
பாதகம் தவிர்த்து நல்லெண்ண முடையார்குத் தருவா னருள்
- 95

அருள் தரும் துண்டியா னென்றும் விரும்புவா னடியார்
மருள் நீக்கி மகிழ் திகழ் வாழ்வீந்தருள, உலகமுய்ய
அருள் பெறலா மவனைத் தினம் மனதால் நினைத்தால்
இருள் போக்கப் போது மவனை விரும்புதல் ஒன்றே - 96

ஒன்றே குலம், ஒருவனே இறைவன், யாது மவனருளே
நன்றே செய்யின் தீதென்றும் தீண்டா தெம்மை, நன்றை
இன்றே செய்தல் மாதவம், வடிவங்கள் பல பெற்றவனை
நின்றும் இருந்தும், கிடந்தும் நினைத்துப் பெறலாம் யாதும்
- 97

யாதுமாகி நின்ற பெருமான் மாந்தர் வாழ்வு சுவாரசியம் பெற
தீதும் நன்றும், உயர்வு தாழ்வு, இரவு பகல் என வகுத்தான்
ஓது மவன் நாம மென்றும் தரும் மகிழ்வு, வாழ்வாங்கு வாழ
சூதுவாதின்றி வாழ்ந்தால் ஆவார் வானுறை தெய்வமாய் - 98

வானும் மண்ணும் மேன்மையுற, மாந்த ரெல்லாம் சிறப்புற
கூனும் கிழவி ஔவை படைத்து மகிழ்வித்த பாலும், தெளி
தேனும், பாகும், பருப்பும் கலந்து கொடுத்தால் போது மவன்
தானு மிரங்கி யாதும் சிறக்கத் தருவா னென்றும் அருள் - 99

என்றும் துண்டியான் திருவடிகள் பணிந்து பூசிக்கு மருளும்
குன்றா பக்தியு மவன் புகழ்பாடும் திறனும் தந்தா னெனக்கு
மன்றாடி வேண்டுகின்றேன் மாந்தர் வாழ்வு மேன்மையுற, யாதும்
தென்றலாய் வசந்தமாவது உன்னருளென அறிந்தனனே - 100

நூற்பயன்

சிவனுமை மைந்தன் தொந்தி வயிறுடை துண்டியானை
புவனம் சிறக்க அருளீயும் கருணை கொண்ட துதிக்கையானை
குவலயம் போற்றும் கந்தனைத் தம்பியா யுடைய வேழன்
தவ முதல்வனைத் துதிப்போர்க்கு ஒரு இன்னலு மில்லையே

05

பிள்ளையார் கீர்த்தனைகள்

5.1 அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் கீர்த்தனைகள்

இராகம்:-நாட்டை ஆ: ஸகமபநிஸ் 36 இன்
தாளம்:- ஆதி அ: ஸ்நிபமகமரி‹ ஜன்னியம்

எடுப்பு

கருவினைகள் போக்கி ஆனந்தம் தந்திடும்
பெருமான் மகன் கும்பிழாவளையானே

தொடுப்பு

மனச் சஞ்சலம் நீக்க உன்பாதம் பணிந்த
மாருதப்புர வல்லியின் குறை போக்கியவனே

முடிப்பு

அளவைப் பதிமேவி அடியவர்க் கருளும்
அழகனே உனை வணங்கினால் தீருமே
அருமருந்தென உன் நாமம் ஓதினால்
அனைத்துத் துன்பங்களும் ஓடி மறைந்திடுமே

இராகம் :-கல்யாணி ஆ: ஸரிகமபதநிஸ 65 வது
தாளம்:- மிஸ்ரசாபு அ: ஸ்நிதபமகரிஸ மேளம்

எடுப்பு

அருளோங்கும் கும்பிழாவளைப்
பெருமானே அருள் தருவாய்

தொடுப்பு

உனைத் தினமும் வணங்கிடவே
ஆனை முகனே அருள் தருவாய்

முடிப்பு

இசை ஞானமும் இயல் அறிவும்
உனைப் பாடிட எனக் கருள்வாய்
வசை பாடிடும் கும்பலி லிருந்து
எனைக் காத்து அருள் புரிவாய்

5.2 அளவெட்டி அழகொல்லைப் பிள்ளையார் கீர்த்தனைகள்

ராகம்:- சலநாட ஆ: ஸரிகமபதநிஸ் 36 வது
தாளம்:- ரூபகம் அ: ஸ்நிதபமகரிஸ மேளம்

எடுப்பு

கழனிக் கரையில் அமர்ந் தருளும்
அழகொல்லைப் பிள்ளையாரே

தொடுப்பு

தினம் உனைத் தொழும் மாந்தர்க் கெல்லாம்
மனக் குறை நீங்க வழி செய்குவாய்

முடிப்பு

அழகு நடையைக் கனாவில் கண்டேன்
குழந்தை யுள்ளம் புரிந்து கொண்டேன்
வேழ முகனே வணங்கி நின்றேன்
சூழ மருவும் அடியார் கண்டேன்

இராகம்:- மோகனகல்யாணி ஆ: ஸரிகபதஸ் } 65 இன்
தாளம்:- ஆதி அ: ஸ்நிதபமகரிஸ } ஜன்னியம்

எடுப்பு

அழகொல்லைப் பதிமேவி ஆண்டருள் புரிந்து
தொழுமடியார் குறை தீர்க்கும் வேழமுகனே

தொடுப்பு

காலனை வென்ற கருமேனி யுடையானே
வேலவன் அண்ணனே நம்பிக்கை தருபவனே

முடிப்பு

அகவுணர்வு தெளிந்து முகம் மலர்ந்து சிறக்க
அகம் மகிழ வணங்கினாள் மாருதப்புரவீகவல்லி
இகபரசுகம் தந்து வாஞ்சையுடன் வரமளிக்கும்
பகலோனும் வணங்கும் தொந்திப் பெருமானே

5.3 பன்னாலை வரத்தலம் பிள்ளையார் கீர்த்தனைகள்

இராகம் :- கமாஸ்	ஆ: ஸமகமபதநிஸ்	}	28 இன்
தாளம் :- ஆதி	அ: ஸ்நிதபமகரிஸ	}	ஜன்னியம்

எடுப்பு

வரமீந்து காத்தருளும் பன்னாலைப் பதிமேவும்
வரத்தலக் கற்பகப் பிள்ளையாரே வருவாய்

தொடுப்பு

தினம் தினம் தொழுமடியார் மனதிலமர்ந்து
மனக் கனம் குறைத்து மகிழ்வை ஊட்டும

முடிப்பு

மாருதப்புரவீக வல்லி உனைத் துதித்து
மாறு நீங்கி சுகம் பெற்று மகிழ்ந்தாளே
மாபெரும் தலைவனாய் நின்ற கணபதியே
மாண்புடன் வாழ வழிகாட்டி யருளும்

இராகம் :- மலயமாருதம்	ஆ: ஸரிகபதநிஸ்	}	17 இன்
தாளம் :- ரூபகம்	அ: ஸ்நிதபகரிஸ	}	ஜன்னியம்

எடுப்பு

அபாயத்தைத் தகர்த்திடும்
கபாலத்தான் மைந்தனே

தொடுப்பு

முதல் வணங்கும் பேறு கொண்ட
முதல்வனே வரத்தலத்தானே

முடிப்பு

அறிவும், பொருளும், சுக வாழ்வும்
நெறி பிறழ்வாத மக்கட் பேறும்
தளர் வறியா நெஞ்சமும்
வளர் மகிழ்வும் ஈந்தருளும்

06

சிவபெருமான் கீர்த்தனைகள்

இராகம்:- பூபாளம்	ஆ: ஸரிகபதஸ்	15 இன்
தாளம்:- ஆதி	அ: ஸ்தபகரிஸ	ஜன்னியம்

எடுப்பு

அடியவர்க் கருளும் சிவனே போற்றி
துடியைத் தாங்கும் அரனே போற்றி

தொடுப்பு

அருளாளர் போற்றும் முக்கண்ணனே போற்றி
தருவாய் சுகமும் மகிழ்வும் வாழ்விலே

முடிப்பு

அட்டமூர்த்தி அழகனே போற்றி போற்றி
தொட்ட காரியம் நிறைவேற அருள்வாய்
தெட்டத் தெளிவுடன் வணங்குகின்றேன் உனையே
காட்டுவாயுன் முகத்தை துண்டியான் தந்தையே

இராகம் :- பைரவி	ஆ: ஸரிகமபதநிஸ	20 இன்
தாளம் :- ஆதி	அ: ஸ்நிதபமகரிஸ	ஜன்னியம்

எடுப்பு

ஆதியந்தமில்லா அருட்பெரும் சோதியே
நாதியற்றோருக் கருளும் சிவனே

தொடுப்பு

ஆரமாக அரவத்தை யணிந்த பெருமானே
சூரரை அசுரராக மாற்றும் வல்லோனே

முடிப்பு

ஆரொடு நோகேனென்ற வருக்கருளியவா
ஊரொடு நானு மானந்தமுடன் வாழ
சீரொடு பொருளும் சுகமும் தந்தருள்வாய்
யாரொடும் நோகா துண்டியான் பிதாவே

இராகம்:- வலஜி | ஆ: ஸகபதநிஎ | 22 இன்
தாளம்:- ரூபகம் | அ: ஸ்நிதபகஎ | ஜன்னியம்

இராகம்:- வலஜி	ஆ: ஸகபதநிஎ	22 இன்
தாளம்:- ரூபகம்	அ: ஸ்நிதபகஎ	ஜன்னியம்

எடுப்பு

இன்புற்று வாழ வழிகாட்டுவாய்
அன்பே சிவமா யமர்ந்தவனே

தொடுப்பு

இன்னல் போக்கி இடர் களைந்து
என்னை யாண்டருள் புரியும் ஈசனே

முடிப்பு

இமயமலையில் வீற்றிருப்பவனே
உமதடிமையாய் சரண் புகுந்தேன்
நமசிவாய நாமத்தை உச்சரித்தேன்
எமக்கருள்வாய் துண்டியான் முதல்வா

இராகம்:-ஆனந்தபைரவி	ஆ: ஸகரிகமபதபஸ்	20 இன்
தாளம்:- மிஸ்ர சாபு	அ: ஸ்நிதபமகரிஸ	ஜன்னியம்

நகுலேசுவரர்

எடுப்பு

ஈழ வடபால் கீரிமலை மேவும்
தோழமை பூணும் நகுலேச்சர நாதா

தொடுப்பு

ஈதல் செய்வோர்க்கு வாரி வழங்கும்
நாதனே என்றும் ஆனந்தம் தரும்

முடிப்பு

ஈர விழியோடு ஏங்கித் தவிக்கும்
ஈழ மக்கள் துயர் துடைக்காயோ
ஈசனே நகுலாம்பிகை மணாளனே
துண்டியான் பதியே யருள்வாய்

இராகம்:- காம்போதி ஆ: ஸரிகமபதஸ் } 28 இன்
தாளம்:- ரூபகம் அ: ஸ்நிதபமகரிஸ } ஜன்னியம்

எடுப்பு

உலகையாளும் சிவபெருமானே
உலக மக்கள் துயர் தீராயோ

தொடுப்பு

உவகையுடன் வாழ மக்கள்
கவலை போக்கி மகிழ்வு தருவாய்

முடிப்பு

உலகம் பெற்றோரென்று காட்டிய
பலமான் பிள்ளையாருக் கருளி
உலகுக்குக் காட்டி யுணர்த்திய
உமை மணாளா துண்டியான் தந்தையே

இராகம்:- கம்பீரநாட்டை ஆ: ஸகமபநிஸ் } 36 இன்
தாளம்:- ஆதி அ: ஸ்நிபமகஸ } ஜன்னியம்

திருக்கேதீசுவரர்

எடுப்பு

ஊழ்வினை போக்கித் தீராப்பிணி தீர்த்து
வாழ்வு தர மாதோட்டம் மேவும் கேதீச்சரனே

தொடுப்பு

ஊனுடம்புப் பிணியகன்று சுகம் பெற
நானுமுன்னடி தொழுதேன ருள்வாய்

முடிப்பு

ஊக்கம் தந்துயர்வு பெற வழிகாட்டுவாய்
ஏக்கம் போக்கும் கௌரியம்மை மணாளனே
பாலாவியிலாட வினைகளை யறுக்கும்
ஏலாதவர்களுக்கருளும் துண்டியான் பதியே

இராகம்:- கரிகாம்போதி ஆ: ஸரிகமபதநிஸ 28 வது
தாளம்:- ஆதி அ: ஸ்நிதபமகரிஸ மேளம்

எடுப்பு

எட்டுத் திக்கும் நிறைந்திருப்பவரே – அறியார்
எல்லோருக்கும் நல்ஞானம் ஈந்திடுவாய்

தொடுப்பு

எல்லாத் தெய்வமுமாகி நின்ற பரமசிவனே
எண்ணுவார் எண்ணம் போல் காட்சி தரும்

முடிப்பு

எலி வாகனன் பிள்ளையாரு மானாய்
கலியுகக் கடவுள் முருகனு மானாய்
ஒலியு மானாய் ஒளியு மானாய்
புலித்தோலணிந்தவனே துண்டியான் பதியே

இராகம்:- கேமவதி ஆ: ஸரிகமபதநிஸ் } 58 வது
தாளம்:- ஆதி அ: ஸ்நிதபமகரிஸ } மேளம்

திருக்கோணேசுவரர்

எடுப்பு

ஏழிசை வேந்தன் இராவணன் துதித்த
ஆழிக்கரை மலைமீது மேவும் கோணேச்சரனே

தொடுப்பு

ஏதங்கள் நீக்கி ஞானத்தை யீந்திடும்
நாத வடிவான சிவபெருமானே

முடிப்பு

ஏழுலுகையு மாண்டருளும் நீலகண்டனே
ஏலாதவர்க் கருளும் மாதுமை மாணாளனே
ஏங்குகின்றேன் வாவா அருள் தர வாவா
ஏனின்னும் தாமதம் துண்டியான் தந்தையே

- ஏதங்கள் - துன்பங்கள்

இராகம்:- மோகனம் ஆ: ஸரிகபதஸ் } 28 இன்
தாளம்:- கண்ட சாபு அ: ஸ்தபகரிஸ } ஜன்னியம்

முன்னேச்சரநாதர்

எடுப்பு

ஐங்கரன் போற்றிடும் மேலான பெருமானே
எங்களின் குறைதீர்க்க அருள்தர வாராயோ

தொடுப்பு

ஐந்தொழில் செய்திடும் முன்னேச்சர நாதனே
எந்தன் வினையறுக்க மாயவனாறி லாடினேன்

முடிப்பு

ஐந்தீச்சரங்களில் மேவும் சிவபெருமானே
கந்தனிடம் உபதேசம் பெற்ற இறைவா
எந்தனுக் கருள்புரி வடிவாம்பிகை மணாளா
உந்தாள் பணியும் துண்டியான் முதல்வனே

இராகம்:- ஆரபி ஆ: ஸரிமபதஸ் 29 இன்
தாளம்:- ஆதி அ: ஸ்நிதபமகரிஸ ஜன்னியம்

வண்ணை வைத்தீசுவரர்

எடுப்பு

ஒருமுறை காண வரம் தருவாய் - உன்
திருமுகம் காண வேண்டும் வைத்தீச்சர நாதா

தொடுப்பு

ஒப்பிலா அப்பனே வானோர் போற்றிடும்
ஒளி வண்ணனே தையல்நாயகி மணாளா

முடிப்பு

ஒவ்வாத நோயகலும் வில்லூன்றியிலாட
ஒற்றுமை சேரத் துன்பம் போக அருள்வாய்
ஒன்றாய் ஒருவனாய் நின்ற சோதியே
ஒற்றைக்கொம்பன் துண்டியான் பதியே

இராகம்:- லதாங்கி   ஆ: ஸரிகமபதநிஸ   63 வது

தாளம்:- ஆதி   அ: ஸ்நிதபமகரிஸ   மேளம்

எடுப்பு

ஓதுவாருன் நாமம் சிவனே சிவனேயென்று
ஓதுமடியார் குறை போக்க வருவாயே

தொடுப்பு

ஓரணை கட்ட பிட்டுக்கு மண் சுமந்து
ஓர் கிழவிக் குதவிய சிவபெருமானே

முடிப்பு

ஓம் நமசிவாய என்ற நாமம் ஓதுவோர்க்கு
ஓடிடும் மனக்கவலை துன்பங்களெல்லாம்
ஓடோடி வருமடியார் குறை போக்குவாய்
ஓங்கார மூர்த்தி துண்டியான் முதல்வனே

தாளம் :- ரூபகம்   அ: ஸ்தபமரிஸ } ஜன்னியம்

எடுப்பு

ஔவியம் போக்கிக் கலி தீர்க்கும்
ஒளி வடிவான சிவபெருமானே

தொடுப்பு

ஔகாரமாகவும் அகரமாகவும்
ஓங்காரமாகவும் நின்ற சிவனே

முடிப்பு

ஔவைக் கருளிய துண்டியான் பதியே
அளவு கடந்து நின்ற சிவனே
சிவசிவ என்று ஓதும டியார்க்கு
சிவனருள் கிடைக்க அருள் தருவாய்

- ஔவியம் - பொறாமை

07

•

அளவெட்டி வடக்கு பூரணை, புட்கலை உடனுறை ஐயனார் கீர்த்தனைகள்

இராகம்:- ரீதிகௌளை ஆ: ஸகரிகமநிநிஸ் 22 இன்
தாளம்:- ஆதி அ: ஸ்நிதமகமபமகரி‌ ஜன்னியம்

எடுப்பு

ஆராதனை செய்துன்னை வணங்குகின்றேன்
பாராமுகமேனோ அளவையூர் சாத்தனாரே

தொடுப்பு

தெருவோரம் பனம்பழம் பொறுக்கிய வளுக்குத்
திருமுகம் காட்டிக் குறைதீர்த்த பெருமானே

முடிப்பு

வீரமாகாளரை படைத் தலைவராக் கொண்ட
பூரணை, புட்கலை உடனுறை ஐயனாரே
ஓலம், ஓலமென்ற தமிழ் மக்கள் குறை தீர்க்க
வாராயோ துண்டியா னருகிருக்கும் ஐயனாரே

இராகம் :-சிம்மேந்திரமத்யமம் ஆ : ஸரிகமபதநி 57 வது
தாளம் :- மிஸ்ரசாபு அ : ஸ்நிதபமகரிஸ மேளம்

எடுப்பு

ஆதி முதல்வனே காவல் தெய்வமே
சோதி வடிவாய் ஒளிரும் ஐயனாரே

தொடுப்பு

யோகிகள், சித்தர்கள், வாயு, குபேரன்
ஆகியோர் வணங்கிய கருணைத் தெய்வமே

முடிப்பு

அருளாட்சி புரிந்து அடியார் குறை தீர்க்கும்
அளவைப் பதிமேவும் சாத்தனாரே
அன்பு காட்டும் அடியார்க் கெல்லாம்
அருள் வழங்கும் துண்டியான் அருகிருக்கும்

08

அளவெட்டி வடக்கு பத்திரகாளி உடனுறை ஆதி வீரபத்திரர் கீர்த்தனைகள்

இராகம்:- பிருந்தாவனசாரங்கா ஆ: ஸரிமபநிஸ 29 இன்
தாளம்:- ஆதி அ: ஸ்நிபமரிஸ ஜன்னியம்

எடுப்பு

சிவனின் மூர்த்தமா யுதித் தருள்பவனே
சிவநிந்தை செய்வேரை வேரறுக்கும் வீரனே

தொடுப்பு

அன்பும் கருணையும் கொண்ட பெருமானே
அளவைப் பதிமேவும் ஆதி வீரபத்திரரே

முடிப்பு

குன்றா வழகுடைய காளி மணாளனே
உன்னழகு காணக்கண் வேண்டும் கோடி
அன்பு கொண்டடியார் துதித்துப் போற்றினர்
இன்னல் போக்கி இன்பம் தந்தருள்வாய்

இராகம்:- சாவேரி ஆ: ஸரிமபதஸ் 15 இன்
தாளம்:- ஆதி அ: ஸ்நிபமகரிஸ ஜன்னியம்

எடுப்பு

இன்பம் தந்தருளும் ஆதி வீரபத்திரரே
துன்பம் வருகையில் தேடிவரும் அடியார்க்கு

தொடுப்பு

உனைத் தினம் நினைத்தால் ஓடுமே துன்பம்
தனமொடு கல்வியும், சுகமும் ஈந்தருளும்

முடிப்பு

எந்த வேளையும் அடியார் குறை போக்க
உந்தன் நீறு ஒன்று போதுமே – திரு
நீறு போடும் மந்திரத்தால் – மாறு
நீக்கி யருளும் அளவைப் பதிவாழ்

இராகம்:- வசந்தா ஆ: ஸகமதநிஸ 17 இன்
தாளம்:- ஆதி அ: ஸ்நிதமகரிஸ ஜன்னியம்

எடுப்பு

நம்பிக்கை, தைரியம், பலமும் தந்து
எம் வாழ்வு சிறக்க அருளும் வீரபத்திரா

தொடுப்பு

பத்திரகாளி உடனுறை அளவைப் பதிமேவி
நித்தமும் அடியார் மனக்குறை போக்கும்

முடிப்பு

கண்காணாத் தொல்லை, பில்லி, சூனியம்
கண்ணூறு, பேய்பிடித்தல், அச்சம் அனைத்தும்
வெண்ணீறு போட்டு பூவொன்று வைத்து
கண்ணாரக் கண்டு வணங்கினால் பறந்தோடுமே

இராகம்:- பைரவி ஆ: ஸரிகமபதநிஸ 20 இன்
தாளம்:- ரூபகம் அ: ஸ்நிதபமகரிஸ ஜன்னியம்

எடுப்பு

வந்தடியார்கள் குறை போக்கி
விந்தை புரியும் வீரபத்திரரே

தொடுப்பு

கவலை நீங்கி மனம் மகிழ
அவன் திருநீறு ஒன்று போதுமே

முடிப்பு

அடியார் வேண்டும் யாது மீந்து
விடிவு தந்து சுகம் வழங்கும்
அளவை மேவி யருள் புரியும்
வடிவு திகழ் களி மணாளா

09

அம்மன் கீர்த்தனைகள்

9.1 அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கீர்த்தனைகள்

இராகம்:- சங்கராபரணம் ஆ: ஸரிகமபதநிஸ 29 வது
தாளம்:- ஆதி அ: ஸ்நிபதமகரிஸ மேளம்

எடுப்பு

தாயே தவளக்கிரி முத்துமாரி யம்மாளே
மாயை போக்கிக் கருணை பொழிந்திடும்

தொடுப்பு

அற்புதங்கள் புரிந்திடும் மகாமாரித் தேவியே
அற்புதக் கலைஞர்களை ஈந்தருளும் ஞானசுரபி

முடிப்பு

தேடிய தோட்டினை அமுதினில் காட்டி
கூடிநின்ற அடியவர்க்கு அற்புதம் காட்டி
மதியார் மானிடருக்கு நல்லறிவு புகட்டி
கதியற்றவருக் கருளிய துண்டியான்

இராகம்:- கம்சநாதம் ஆ: ஸரிமபநிஸ 65 இன்
தாளம்:- ரூபகம் அ: ஸ்ரிமபநிஸ ஜன்னியம்

எடுப்பு

ஊழ்வினை போக்கும் தவளகிரித் தாயே
சூழ்ந்திடும் வினை யறுக்க வருவாய்

தொடுப்பு

ஊடாடும் மனத் தேவையறிந்து
நாடமலிருப்ப தேனோ தாயே

முடிப்பு

ஊழியம் செய்தேன் திருவடி பணிந்து
வாழிய வாழிய வெனத் துதித்தேன்
எழில் தருமுனது முகத்தைக் கண்டேன்
அமிப்பாய் குறைகளைக் துண்டியா னன்னையே

தவளக்கிரி முத்துமாரி அம்மன்
(கொடியேற்றம்)

இராகம்:- அமிர்தவர்சினி ஆ: ஸகமபநிஎ 65 இன்
தாளம்:- ஆதி அ: ஸ்நிபமகஸ ஜன்னியம்

எடுப்பு

அலங்கார நாயகியே தவளக்கிரி மாரியம்மா
அகங்காரம் போக்கி நல்வாழ்வு அளித்திடுவாய்

தொடுப்பு

ஊர்கூடி விழாவெடுக்கும் ஆனி மாதத்தில்
பாரெங்கும் உன்னடியார் தொழுதேத்திடுவார்

முடிப்பு

பசிப்பிணியோடு நோய் நொடிகளையும் நீக்கி
நசியுண்ட எம்மவர் வாழ்வை மீட்க வாராயோ
தூசிபட்ட கண்போல் கலங்கும் நாட்டினிலே
நேசிப்பவரைக் காக்க வாராயோ துண்டியான் தாயே

இரண்டாம் நாள் திருவிழா

இராகம்:- வகுளாபரணம் ஆ: ஸரிகமபதநிஸ 14 வது
தாளம்:- ரூபகம் அ: ஸ்நிபதமகரிஸ மேளம்

எடுப்பு

கருணை யுள்ளம் கொண்ட தாயே
வருவாய் என் துயர் தீர்க்கவே

தொடுப்பு

உனது கடைக்கண் பார்வை கிடைக்க
தினமும் துதிக்கின்றேன் அருள் தருவாய்

முடிப்பு

அன்பொடு உன் நாமம் சொல்லி
உன்புகழ் பாட அருகிருப்பாய்
கன்மம் போக்கி வாழ்வீந்திடும்
துண்டியான் தாயே தவளக்கிரியாளே

மூன்றாம் நாள் திருவிழா

இராகம்:- தோடி ஆ: ஸரிகமபதநிஸ் 8 வது
தாளம்:- ஆதி அ: ஸ்நிபதமகரிஸ மேளம்

எடுப்பு

முத்துமாரி தாயே வா வா வா - இங்கு
நித்தமும் வந்தெம்மை காத்தருள்வாய்

தொடுப்பு

மனிதரின் குணமிங்கு சிதையுண்டு போகுதே
இனியும் தாமதமேன் வா வா காக்க வா

முடிப்பு

சம்பந்தனுக் கிரங்கி பால் கொடுத்தவளே
எம்மவர் குறைபோக்க இரங்காயோ
சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் தாயே
துண்டியானக்குப் பேரன்பு காட்டியவளே

நான்காம் நாள் திருவிழா

இராகம்:- பகுதாரி ஆ: ஸகமபதநிஸ் 28 இன்
தாளம்:- ஆதி அ: ஸ்நிபமகஸ ஜன்னியம்

எடுப்பு

காத்தானைக் காத்த மும்மாரி தேவியே
கூத்தாடி மகிழ்ந்தோம் உன் சந்நிதியிலே

தொடுப்பு

மகிழ்வோடு அருள்பெற நாடினோம் உன்னடியை
அகிலமெல்லாம் உன்புகழ் பாடி மகிழ்ந்தனவே

முடிப்பு

அடியார் குறை தீர்க்கும் முத்துமாரி அம்மையே
குடிகள் யாவும் நலன்பெற அருள் தருவாய்
துடியிடையாளே என்றும் ஆனந்த மானவளே
துண்டியான் அருகில் அமர்ந்த தவளக்கிரியாளே

ஐந்தாம் நாள் திருவிழா

இராகம்:- கிந்தோளம் ஆ: ஸகமதநிஃ 8 இன்
தாளம்:- மிஸ்ரசாபு அ: ஸ்நிதமகஸ ஜன்னியம்

எடுப்பு

தீப ஒளியாய் நின்ற தாயே
தூபம் காட்டி வணங்கி நின்றோம்

தொடுப்பு

உன்பெயர் சொல்லி வணங்கினோம்
முன்செய்த வினை அகற்றுவாய்

முடிப்பு

ஒளியுமானாய் ஒலியுமானாய்
தெளிவு தந்து கலி தீர்ப்பாய்
வழிகாட்டி வலி போக்கும்
துண்டியான் தாயே முத்துமாரியே

ஆறாம் நாள் திருவிழா

இராகம்:- மதுவந்தி ஆ: ஸகமபநிஸ் 59 இன்
தாளம்:- கண்டசாபு அ: ஸ்நிதபமகரிஸ ஜன்னியம்

எடுப்பு

இசைவாழ எம்மூரில் வாழுமெங்கள் தெய்வம்
இசையாலே அவள் பெயர்பாடி மகிழ்ந்திடுவோம்

தொடுப்பு

ஓம்சக்தி முத்துமாரி என்றாலே அணுகிடுவாள்
நாம் என்றும் அவளன்பில் திளைத்திடுவோம்

முடிப்பு

நம்பிக்கை வைத்தவர்க் குதவிடும் அம்மை
நம்வாழ்வு சிறந்திடவே அவள்பாதம் பணிந்திடுவோம்
விண்ணோர் போற்றிட அளவைப் பதிமேவும்
துண்டியான் அன்புடன் வணங்கிடும் தாயே

ஏழாம் நாள் திருவிழா

இராகம்:- ஸ்ரீரஞ்சினி ஆ: ஸரிகமதநி௳ 22 இன்
தாளம்:- ஆதி அ: ஸ்நிதமகரி௳ ஜன்னியம்

எடுப்பு

தஞ்சம் அடைந்தவர் நலன் காக்கும்
விஞ்சும் பேரழகி அளவை முத்துமாரி

தொடுப்பு

பஞ்சம் போக்கும் கருணை நாயகியே
சஞ்சீவியாய் அமர்ந்த முப்பெரும் தேவியே

முடிப்பு

மஞ்ச ரதமேறும் உன்னழகு காண
நெஞ்சார நினைந்து உள்ள முருகுதே
கெஞ்சும் எமக்கு அருள் சுரப்பாய்
துண்டியான் விரும்பும் தவளக்கிரி அம்மையே

எட்டாம் திருவிழா

தாளம்:- ஆதி அ: ஸ்தமகரி௳ ஜன்னியம்

எடுப்பு

முத்துச்சப்பற மீதில் அமர்ந்திடும் அன்னையே
வித்தைகள் காட்டி மகிழ்வு அளித்திடும்

தொடுப்பு

வண்ண வண்ண பூக்களால் அலங்காரம் செய்பவளே
மண்வளம் செழித்திட அருள்மழை பொழியும்

முடிப்பு

நடு இரவினில் விண்ணொளிர வருவாய்
விடும் வான வெடிகளொலிக்க வருவாய்
படுந்துயர் களைய அபயம்காட்டி வருவாய்
துண்டியான் தேடுகிறான் ஓடோடி வருவாய்

சப்பறத் திருவிழா

இராகம்:- சண்முகப்பிரியா ஆ: ஸரிகமபதநிஎ 56 வது
தாளம்:- மிஸ்ரசாபு அ: ஸ்நிதபமகரிஎ மேளம்

எடுப்பு

உனது முகம் காண ஏங்கும் எங்களின்
மனநிலைதனை அறியாயோ

தொடுப்பு

பெரிய அம்மாள் வருவதைக் காண
கரிய விழிகள் தவிக்குது தாயே

முடிப்பு

வானம் தொடும் சப்பற மதில்
கானம் பொழிய அடியார் சூழ
நினது உலாவினை காண வேண்டும்
கண்ணாயிரம் துண்டியான் தாயே

தேர்த் திருவிழா

இராகம்:- கம்பீரநாட்டை ஆ: ஸகமபநிஸ் 36 இன்
தாளம்:- ஆதி (கண்டநடை) அ: ஸ்நிபமகஸ ஜன்னியம்

எடுப்பு

பாநிபப ஸநிகஸநி பாநிபப நீஸா,
தாதகிட தகதகிட தத்தகிட தத்தாம்
கொண்டைமுடி அலங்கரித்து தேரேறி வாறா
ஸநிஸகம பமநிபம கமபமக ஸாஸா,
தாதஜொணு தகதஜொணு தத்தஜொணு தத்தாம்
கன்மவினை தனையழித்து அன்பர்களைக் காக்க

தொடுப்பு

இராகம்:- பிருந்தாவனசாரங்கா ஆ: ஸரிமபநிஸ் 29 இன்

தாளம்:- ஆதி(சதுஸ்ரநடை) அ: ஸ்நிமபநிஸ ஜன்னியம்

மங்கல வாத்தியங்களோடு பண்ணுமிசைக்க
தூக்குக் காவடியுடன் பறவைக் காவடியுமாட

முடிப்பு

இராகம்:- கம்சானந்தி ஆ: ஸரிகமதநிெ 53 இன்
தாளம்:- ஆதி (திஸ்ரநடை) அ: ஸ்நிதமகரிெ ஜன்னியம்

வீதியெங்கும் அடியார் அரோகரா முழங்க
பெண்களுடன் ஆண்களும் வடம் பிடித்திடவே
நாதியற்ற எங்களைக் காத்தருள் புரிவாய்
துண்டியான் தாயே தவளக்கிரி முத்துமாரி

தீர்த்தத் திருவிழா

இராகம்:- மத்தியமாவதி ஆ: ஸரிமபநிஸ 22 இன்
தாளம்:- ஆதி அ: ஸ்நிபமரிஸ ஜன்னியம்

எடுப்பு

அருள்தர வருவாய் தவளக்கிரி முத்துமாரியே
அற்புதங்கள் செய்து அவனியைக் காத்திடும்

தொடுப்பு

அறிவிலார் அறிவின்றி செய் காரியங்கள்
அறியா மக்களை வாட்டி வதைக்குதம்மா

முடிப்பு

அன்புடன் அர்ச்சனை செய்து உன்னடியார்கள்
அனுதினம் உன் திருவடியைத் துதிக்கின்றனர்
அபய கரமுடன் இன்முகம் காட்டி அடியவர்க்கு
அருள் தருவாய் அளவைத் துண்டியான் தாயே

9.2 தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கீர்த்தனைகள்

இராகம் :-சுநாதவினோதினி ஆ: ஸகமதநிஸ 65 இன்
தாளம் :-ஆதி அ: ஸ்நிதமகஸ ஜன்னியம்

எடுப்பு

தொல்லைகளகற்றி ஆத்ம ஞானமீந்திடும்
தெல்லி நகர் மேவும் துர்க்காதேவியே

தொடுப்பு

வீரத்துடன் ஞானமும் பொருளுமீந்திடும்
சூரனை வதைத்த நாயகியே மலைமகளே

முடிப்பு

தூயமனத்தோடு நற்பணிகள் செய்பவர்க்கு
தாயன்பு காட்டி வாழவைக்கும் - திரிசூல
நாயகியே யுன்புகழ் பாடினோம் காத்தருள்வாய்
தீயசக்திகளைப் போக்கும் துண்டியானன்னையே

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கொடியேற்றம்

இராகம் :- சாருகேசி ஆ: ஸரிகமபதநிஸ 21 வது
தாளம் :- மிஸ்ரசாபு அ: ஸ்நிதபமகரிஸ மேளம்

எடுப்பு

அவனி யெல்லாம் மகிழ்ந்து வாழ
பவனி வரும் துர்க்கா தேவியே

தொடுப்பு

அள்ளி யள்ளி செல்வம் ஈந்திடும்
அழகின் அழகே துர்க்கா தேவியே

முடிப்பு

என்றும் அடியார் நலன் காத்து
அன்பு கருணை காட்டுபவளே
அன்ன மீந்து பசி போக்கிடும்
துன்பம் போக்கும் துண்டியான் தாயே

இரண்டாம் நாள் திருவிழா

இராகம் :- தர்மவதி ஆ : ஸரிகமபதநிஸ 59 வது
தாளம் :- கண்டசாபு அ : ஸ்நிதபமகரிஸ மேளம்

எடுப்பு

ஆரெல்லாம் நாடுவரோ அவருக் குதவிடும்
பாரெல்லாம் புகழ்பாடும் தெல்லி நகர்த் துர்க்கையே

தொடுப்பு

ஆரமொடு திரிசூலம், அபயகரம், சக்கரமும்
வீரமுடன் தாங்கிடும் மகாகௌரி தாயே

முடிப்பு

கதாயினி, அம்பிகா, லலிதா, இராஜேஸ்வரி
கண்டலினி, பவானி, பகவதி, வராகி
என்றவதார மெடுத்து இன்னல் போக்கி
இன்பம் கொடுத்த துண்டியான் விரும்பும்

மூன்றாம் நாள் (திருமுறை) திருவிழா

இராகம் : தன்யாசி ஆ: ஸகமபநிஸ் 8 இன்
தாளம் :- ஆதி அ: ஸ்நிதபமகரிஸ ஜன்னியம்

எடுப்பு

இன்பத் திருமுறையால் பாமாலை சூடுகின்றோம்
கன்மம் போக்கி ஆண்டருள்வாய் தாயே

தொடுப்பு

தழிழிசையால் பண்பாடி மகிழ்ந்த எமக்கு
அமிர்தம் தந்து பெருவாழ்வு தாராயோ

முடிப்பு

வீரமுடன் கல்வியும் பொருளும் ஈய்பவளே
சூரனை வதைத்தின்பம் தந்தவளே எமது
தீராத நோயை வதைத்து சுகம் தருவாய்
தெல்லி நகர் மேவும் துண்டியான் அன்னையே

நான்காம் நாள் திருவிழா

இராகம்:- சகானா ஆ: ஸரிகமபதநிஸ் 28 இன்
தாளம்:- ரூபகம் அ: ஸ்நிதபமகரிகரிஎ ஜன்னியம்

எடுப்பு

ஈடினையில்லா அன்னையே
கேடில்லா வாழ்வு தந்திடுவாய்

தொடுப்பு

நல்ஞானம் தந்து நல்வழி காட்டிடும்
தெல்லியூர் பதி வாழ் தேவமாதா

முடிப்பு

ஐந்து கோபுர அழகின் நடுவே அமர்ந்து
விஞ்சும் அழகி வாசம் கொண்டாள்
ஐந்து ஒன்பது கோபுரமாய் மாற
ஐந்து கரத் துண்டியான் விரும்புகிறான்

ஐந்தாம் நாள் (தங்கரதம்) திருவிழா

இராகம்:- சுபபந்துவராளி ஆ: ஸரிகமபதநிஎ 45 வது
தாளம்:- மிஸ்ரசாபு அ: ஸ்நிதபமகரிஎ மேளம்

எடுப்பு

உனது கடைக்கண் பார்வை வேண்டும்
உலக மக்கள் வாழ்வு சிறந்து விளங்க

தொடுப்பு

தங்கரதம் மீதிலமர்ந்து உலா வரும்
சிங்க நாயகயே வருக நலன் தருக

முடிப்பு

தொழும் அடியார் குறை போக்கும்
உழுகுடைப்பதி தீப சோதியே
அழும் தமிழர் குறை களைய
எழுந்து வாராய் துண்டியான் தாயே

ஆறாம் நாள் (மஞ்சம்) திருவிழா

இராகம்:- ரேவதி ஆ: ஸரிமபநிஸ 2 இன்
தாளம்:- ஆதி (திஸ்ரகதி) அ: ஸ்நிபமரிஸ ஜன்னியம்

எடுப்பு

ஊர் கூடி மஞ்சம் இழுக்குது – துர்க்கா
பேர் சொல்லித் தஞ்சம் கேட்குது

தொடுப்பு

பாரொளியாய் எங்கும் பரவ – அங்கே
பேரொளியாய் அன்னை நிற்கின்றார்

முடிப்பு

சின்னச் சின்ன ஆசை தீர்க்க – தெல்லி
அன்னை அன்பைப் பெற்றிடலாமே
அன்னையின் பாதம் பணிந்தாள் - என்றும்
துண்டியான் மகிழ்ந்திருப்பானே

ஏழாம் நாள் திருவிழா

இராகம்:- சுமநீசரஞ்சினி ஆ: ஸகமபநிஸ 56 இன்
தாளம்:- ஆதி அ: ஸ்நிபமகஸ ஜன்னியம்

எடுப்பு

என்றும் ஆனந்தம் நிலைத்திருக்க - அவள்
முன்னால் தலை சாய்த்துப் பணிந்திடுவோம்

தொடுப்பு

தொல்லைகள் நீங்கி வாழ்வில் சுகம் பெற
தெல்லிநகர் அன்னையைப் போற்றிடுவோம்

முடிப்பு

அன்னம் கொடுத்தடியார் பசிப்பிணி போக்கி
சின்னஞ் சிறார்களுக்கு அடைக்கலம் கொடுத்து
அறப்பணி யாற்றிய தங்கம்மா அன்னையாரும்
சிறப்புடன் வணங்கிய துண்டியான் அன்னையை

எட்டாம் நாள் திருவிழா

இராகம்:- சிறிரஞ்சினி ஆ: ஸரிகமதநிஎ 22 இன்
தாளம்:- ஆதி அ: ஸ்நிதமகரிஎ ஜன்னியம்

எடுப்பு

ஏதுமற்ற ஏழைகளின் ஏக்கம் போக்குபவளே
தீதுபோக்கி தீய செயலை அழிக்கும் தேவியே

தொடுப்பு

ஈழமதில் பெருங்கோவில் கொண்டமர்ந்த துர்க்கையே
ஈந்தருளும் உவகையொடு மக்கள் என்றும் வாழ

முடிப்பு

இராகுகாலப் பூசையேற் றடியார் குறை தீர்க்கும்
இலுப்பைச் சோலைசூழ அமர்ந்த பெருந்தேவியே
கல்வியும் செல்வமும் வீரமும் அளிக்கும்
நல்லுள்ளம் கொண்ட துண்டியான் தாயே

ஒன்பதாம் நாள் (கைலாசவாகனம்) திருவிழா

இராகம் :- சித்ராம்பரி ஆ: ஸரிகமபதநிஸ் 66 வது
தாளம் :- ஆதி அ: ஸ்நிதபமகரிஸ மேளம்

எடுப்பு

ஐம்பெரும் கோபுரம் கொண்ட மர்ந்தவளே
அம்பு வில்லுடன் தீயன வேட்டையாடிடும்

தொடுப்பு

கைலாச வாகனமேறி அழகுதரும் நாயகியே
கைலாசநாதனுடன் வருமுன்னழகு கண்டோம்

முடிப்பு

விண்ணவரும் போற்றிடும் வீரமிகு புயத்தாளே
கண்டிப்பாய் அடியார் செய் தவறுகளை
எண்ணங்கள் ஈடேற அருள் புரிந்தருள்வாய்
துண்டியடி நாயகன் போற்றும் துர்க்கையே

பத்தாம் நாள் (சப்பறம்) திருவிழா

இராகம்:- சுத்த தன்னியாசி ஆ: ஸகமபநிஸ் } 22 இன்
தாளம்:- ரூபகம் அ: ஸ்நிபமகஸ } ஜன்னியம்

எடுப்பு

ஒப்பற்ற நாயகி துர்க்கா தேவி
சப்பறமேறி உலா வருகின்றார

தொடுப்பு

நாடுமடியார் குறைகள் களைந்து
வீடு சுகமடைய அருள் சுரக்கும்

முடிப்பு

அடியார் வடமிழுக்க இசையொலிமுழங்க
அசைந் தசைந்து வரும் சப்பறமதில்
அன்னை வருமழகு காணத் துடிக்கும்
அடியார்களுடன் துண்டியானும்

தேர்த் திருவிழா

இராகம்:- பந்துவராளி ஆ: ஸரிகமபதநிஎ 51 வது
தாளம் : ஆதி அ: ஸ்நிதபமகரிஸ மேளம்

எடுப்பு

ஓலம் ஓலமென்ற அடியார்கள் குறை போக்க
ஞாலம் சுற்றிவர தேரேறி வாறாள் துர்க்கை

தொடுப்பு

பஞ்சமா பாதகங்களை அழித்தொழிக்க
வாஞ்சையுடன் தேரேறி வாறாள் தேவி

முடிப்பு

தேர்வடம் பிடித்துப் பெண்களுடன் ஆண்களும்
ஓரணியாய்ச் சேர்ந்திழுக்க தேரேறி வாறாளம்மா
கார்மேக நிழலுடன் அரோகரா ஓசையுடன்
துண்டியான் மனமகிழ தேரேறி வாறாளம்மா

தீர்த்தத் திருவிழா

இராகம்:- மத்தியமாவதி ஆ: ஸரிமபநிஸ் } 22 இன்
தாளம்:- ஆதி அ: ஸ்நிபமரிஸ } ஜன்னியம்

எடுப்பு

ஔவைக் கருளிய துண்டியான் விரும்பும்
சௌபாக்கிங்கள் தரும் தெல்லித் துர்க்கையே

தொடுப்பு

காத்தருள சிங்க மீதில் எழுந்தருளும்
ஆத்தாளே எங்கள் துர்க்கா தேவியே

முடிப்பு

துர்க்கா புட்கரணியில் புனித தீர்த்தமாட
துர்க்குணங்கள் நீங்கி சேமங்கள் வந்திடுமே
தர்மம் காத்தருளி சுகம் ஈந்தருளும்
துர்க்காதேவி பாதம் பணிந்து போற்றுவோம்

9.3 அளவெட்டி வடக்கு சின்னம்மன் கீர்த்தனைகள

இராகம்:- கீரவாணி ஆ: ஸரிகமபதநிஸ் } 21 வது
தாளம்:- ரூபகம் அ: ஸ்நிதபமகரிஸ } மேளம்

எடுப்பு

சின்னம்மனென் றடியவர் போற்றும்
பென்னம்பெரிய மகாமாரி தேவியே

தொடுப்பு

பொங்கி மடைபோடு மடியார்குறை
நீங்க வரமருளிக் காத்தருளும்

முடிப்பு

ஏத்துவார்க் கருளி குறைநீக்கும்
கூத்தன்சீமா பதியிலுறைபவளே
காத்திருந்து போற்று மடியவர் - துயர்
போக்கும் துண்டியானருகிருக்கும்

இராகம்:- சக்கரவாகம் ஆ: ஸரிகமபதநிஸ் 6 வது
தாளம்:- ஆதி அ: ஸ்நிதபமகரிஸ மேளம்

எடுப்பு

அளவைக் கூத்தன்சீமா மேவும் முத்துமாரி
வளம் பெருக அருளும் சின்னம்மாள் தாயே

தொடுப்பு

அன்னை பெயர் சொல்லப் பயம் நீங்கி
தன்னம்பிக்கையும் பலமும் வந்திடுமே

முடிப்பு

கலைகளை அள்ளி வழங்கும் மகாமாரியே
தலை முதல் பாதம் வரை வணங்கி நின்றோம்
மலைபோல் குவியும் பொருள்களை ஈபவளே
தலை மகனாம் துண்டியான் போற்றும்

9.4 வற்றாப்பளை அம்மன்

இராகம்:- சரசாங்கி ஆ: ஸரிகமபதநிஸ் } 27 வது
தாளம்:- ஆதி அ: ஸ்நிதபமகரிஸ } மேளம்

எடுப்பு

வற்றாப்பளை மேவும் தாயே கண்ணகியே
வற்றாச் செல்வமும் சுகமும் அறிவுமீயும்

தொடுப்பு

அடவிக் கடலோரம் அழகே அமர்ந்து
கடல்நீரில் ஒளியேற்றி அற்புதம் நிகழ்த்தும்

முடிப்பு

அழகுநிறை இடையர் பாற் பொங்கலுண்டு
அடியார் குறைகள் போக்கும் கண்ணகியே
அவனி மாந்தரெல்லாம் உன்னை நாடினர்
அருள்வாய் துண்டியான் விரும்பும் தாயே

இராகம்:- ஆரபி ஆ: ஸரிமபதஸ் } 29 இன்
தாளம்:- ஆதி அ: ஸ்நிபமகரிஸ } ஜன்னியம்

எடுப்பு

பத்தினித் தெய்வமே கண்ணகி தாயே
எத்தனை இடர்வரினும் காத்தருள்வாயே

தொடுப்பு

நந்திக் கடலோரம் அழகுற வீற்றிந்து
வந்தனை செய்வோர்க்கு வேண்டும் வரமளிக்கும்

முடிப்பு

தீராப்பிணி தீர்க்க மனக்குறைகள் போக்க
ஊரார் கூடி ஒன்றாய் பொங்கி மகிழ்ந்தனரே
பாரா முகமேன் அடியார் குறை போக்க
வாராயோ தாயே தவிக்கும் மக்கள் காக்க

9.5 ஏனைய அம்மன் கீர்தனைகள்

இராகம்:- கௌரிமனோகரி — ஆ: ஸரிகமபதநிஸ் } 23 வது மேளம்
தாளம்:- ஆதி — அ: ஸ்நிதபமகரிஸ

எடுப்பு

அம்மா என்றழைப்போருக்கு அடைக்கலம் தந்து
அன்பு காட்டியருளும் அன்னை உமாதேவியே

தொடுப்பு

அணுவும் அசையாதுன் சக்தியில்லையேல்
அரனுடம்பில ரைப்பாகம் பெற்றவளே தாயே

முடிப்பு

அவனியில் மக்கள் துயர் தீர்க்க வாராயோ
அன்னையே லோக இன்னல் தீர்க்க வாராயோ
அஞ்ஞானம் போக்கி மெய்ஞானம் தர வாராயோ
அழகுக்கு ஒப்பாரற்றவளே துண்டியான் தாயே

இராகம்:- மலயமாருதம் — ஆ: ஸரிகபதநிஸ் } 16 இன் ஜன்னியம்
தாளம்:- ஆதி — அ: ஸ்நிதபகரிஸ

கலைத்தாய்

எடுப்பு

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
நேயமுடன் அளித்திடும் கலைத் தாயே

தொடுப்பு

ஆனந்த வாழ்வு பெற கலைஞான மளித்து
தேனமுதம் போலினிக்க வரந்தந்தருள்வாய்

முடிப்பு

ஆரம், ஏட்டுடன் வீணையேந்தி யருளும்
பேரழகியே முத்தமிழ் நாயகியே தாயே
தாரமொடு பிள்ளைகளும் சிறந்து வாழ
சீரது தருவாய் துண்டியான் மகிழும்

இராகம்:- நாட்டைக்குறிஞ்சி ஆ: ஸரிகமநிதநிபதநிஸ் } 28 இன்
தாளம்:- ரூபகம் அ: ஸ்நிதமகமபகரிஸ } ஜன்னியம்

இலக்குமிதேவி

எடுப்பு

இன்பமாய் வாழப் பொருளீந்திடும்
இலக்குமியே சரணம் சரணம்

தொடுப்பு

இருகரங்கூப்பித் தொழுதோமும்மை
இரங்கியெமக்குச் சுகம் தருவாய்

முடிப்பு

இளஞ்சிவப்புத் தாமரையிலமர்ந்து
இன்னல் தீர்க்கும் அலைமகளே
இன்னல்படும் தமிழர் வாழ
இசைவாய் நீ துண்டியான் தாயே

இராகம்:- வரமு ஆ: ஸகமதநிஸ் } 22 இன்
தாளம்:- ஆதி அ: ஸ்நிதமகஸ } ஜன்னியம்

எடுப்பு

ஈடினையில்லா மாபெரும் தாயே
நாடிவருவோரின் குற்றம் நீக்கிடும்

தொடுப்பு

ஈரேழுலுகிற்கும் தாயாக விளங்குபவளே
வாராயோ அழுக்காறு பொறாமை நீக்க

முடிப்பு

ஈசன் விரும்பும் உமையானாய் நீ
தேசம் வாழ வீரம்,செல்வம்,கல்வியளித்தாய்
பாசமுடன் வேண்டுகின்றேன் தமிழர் குறைபோக்க
பாய்ந்தோடி வருவாய் துண்டியான் அன்னையே

இராகம்:- கம்சத்வனி ஆ: ஸரிகபநிஸ் } 29 இன்
தாளம்:- மிஸ்ரசாபு அ: ஸநிபகரிஸ் } ஜன்னியம்

எடுப்பு

உன தருளைப் பெற்றுத் தாயே
நினது திருவடி தனையே பணிந்தோம்

தொடுப்பு

உலக வாழ்வில் நன்மை பெறவே
திலக மிட்டோம் நலந் தருவாய்

முடிப்பு

உவகை யோடு உன்னை நினைந்து
கவலை மறந்து பாதம் தொழுதோம்
பாவம் போக்கி எம்மைக் காத்து
காவல் செய்வாய் துண்டி யான்தாயே

நவராத்திரிப் பாடல் – சக்திப் பாடல்

இராகம்:- பிருந்தாவனசாரங்கா ஆ: ஸரிமபநிஸ் } 29 இன்
தாளம்:- ஆதி – திஸ்ரநடை அ: ஸ்நிபமரிஸ } ஜன்னியம்

எடுப்பு

வீரம், செல்வம், கல்வியினை தந்தருளும் சக்தியே
கரங்குவித்தோமெம்மைக் கடைக்கண் பாரம்மா

தொடுப்பு

தேவி, சங்கரி, நான்முகி, நாராயணி
சாம்பவி, திரிசூலி, அபிராமித் தாயே

முடிப்பு - 1

வீரந் தந்திடக் துர்க்கையானாய்
செல்வம் கொழித்திட இலக்குமியானாய்
கல்வியளித்திட சரஸ்வதியானாய்
முப்பெரும் சக்தியே மூகாம்பிகையே

முடிப்பு - 2

ஒன்பதிரவுகள் கொழுவில் வீற்றிடும்
மலைமகள் அலைமகள் கலைமகள் தாயே
நல்வித்தை ஞானமும் வீரமும் பொருளும்
தந்திடும் துண்டிப் பிள்ளையார் அன்னையே

10

முருகன் கீர்த்தனைகள்

10.1 நல்லைக் கந்தன் கீர்த்தனைகள்

இராகம்:- பந்துவராளி ஆ: ஸரிகமபதநிஸ் } 51 வது
தாளம்:- ஆதி அ: ஸ்நிதபமகரிஸ } மேளம்

எடுப்பு

நல்லை மாநகர் வாழும் வேலாயுதனே
தொல்லை வினையகற்றிடும் சரவணபவனே

தொடுப்பு

அழகுக் கந்தனென் றடியார்கள் போற்றிடும்
நீலமயில் வாகனனே கருணை முருகேசனே

முடிப்பு

மஞ்ச ரதம் ஏறிப்பவனி வந்து முகம் காட்டி
தஞ்ச மடைந்தவர்க் கருள் புரிந்து
பஞ்சங்குறை தீர்த்திடும் முத்துக்குமரனே
அஞ்சாத் துண்டிப் பிள்ளையார் தம்பியே

நல்லைக் கந்தன் தேர்

இராகம்:- சிந்துபைரவி ஆ: ஸரிகமபதநிஸ் } 8 இன்
தாளம் :- ஆதி அ: ஸ்தபமகரிஸநிஸ } ஜன்னியம்

எடுப்பு

தேரேறி உலாவரும் நல்லைக் கந்தா
ஊரே உன்னை காணத் துடிக்குதையா

தொடுப்பு

தீய எண்ணங்களை அழித் தெமக்கு
தூய எண்ணங்களைத் தர வாராயோ

முடிப்பு

அடியார் வெள்ளமதில் நனைந்தருள் புரிய
துடியிடை யாள்களுடன் வரும் அழகனே
படிப்புடன் பொருளும் சுகமும் தருவாய்
கொடியன தகர்க்கும் துண்டியான் தம்பியே

10.2 சந்நிதிக் கந்தன் கீர்த்தனைகள்

இராகம்:- சக்ரவாகம்	ஆ: ஸரிகமபதநிஸ்	16 வது
தாளம்:- ஆதி	அ: ஸ்நிபதமகரிஸ	மேளம்

எடுப்பு

முருகா முருகா சந்நிதி முருகா
தருவாய் எந்நிதியும் வடிவேலழகா

தொடுப்பு

ஏழைகளின் பசிப்பிணி போக்கி – அருள்
மழை பொழிந்திடும் அன்னக் கந்தனே

முடிப்பு

ஆலிலையமுதுண்டிட சேர்ந்திடும் சேமங்கள்
தொண்டமனாறிலாடிட நீங்கிடும் தோசங்கள்
வலிமறந்தாடிடக் குறைகள் தீர்த்திடும்
துண்டிப் பிள்ளையார் தம்பியே வேலவனே

இராகம்:- வாசஸ்பதி	ஆ: ஸரிகமபதநிஸ்	64 வது
தாளம்:- ஆதி	அ: ஸ்நிபதமகரிஸ	மேளம்

எடுப்பு

கவலைகள் நீங்கி மகிழ்ச்சி பொங்கி
குவலயத்தில் வாழச் சந்நிதி செல்வோம்

தொடுப்பு

தோள்மேல் காவடி தலையில் பாற்செம்பு
வாள்மேல் ஆடி வணங்கி நின்றோம்

முடிப்பு

ஏழை எளியோர் உயர்ந்தோர் தாழ்ந்தோர்
ஏது மற்று மனமுருகி வழிபட
ஏழை மக்களின் காவலன் முருகனை
ஏத்திப் போற்றி வணங்கிப் பணிவோம்

10.3 மாவைக் கந்தன் கீர்த்தனைகள்

இராகம்:- சூரியகாந்தம்	ஆ: ஸரிகமபதநிஸ்	17 வது மேளம்
தாளம்:- ஆதி	அ: ஸ்நிபதமகரிஸ	

எடுப்பு

விந்தை புரியும் மாவைக் கந்தனே
எந்தன் குறைகள் போக்கி யருள்வாய்

தொடுப்பு

மாருதப்பரவீக வல்லிக் கருள் செய்து
மாபெரும் கோவில் கொண்ட மர்ந்தவனே

முடிப்பு

அபிசேகம் ஆராதனைக்கு பாலும் தயிரும்
பஞ்சா மிர்தமும் கரும்பும் இளநீரும்
அடியார் வழங்கிப் போற்றி வணங்கினர்
வஞ்சனை நீக்க வா தா அருளே

இராகம்:- கரகரப்பிரியா	ஆ: ஸரிகமபதநிஸ்	22 வது மேளம்
தாளம்:- மிசரசாபு	அ: ஸ்நிபதமகரிஸ	

எடுப்பு

அறம் காக்க ஓடி வாவா
மறத் தமிழ் மாவைக் கந்தனே

தொடுப்பு

என்னுள் இருக்கும் இருள் போக்கி
உன்தாள் பணியும் அருள் தருவாயே

முடிப்பு

எம்மில் குறையும் மனப் பாங்கினை
வம்பு செய்து வளர்த் தெடுப்பாய்
சிவனுக் கறிவுரை சொன்ன கந்தா
அவம் போக்கி அருள வருவாய்

10.4 கதிர்காமக் கந்தன் கீர்த்தனைகள்

இராகம்:- ரசிகப்பிரியா	ஆ: ஸரிகமபதநிஸ்	72 வது
தாளம்:- ஆதி	அ: ஸ்நிபதமகரிஸ	மேளம்

எடுப்பு

மனக்குறை போக்கிடும் கதிர்காமப் பெருமாளே
தினமுன் நாமம் சொல்ல வழி காட்டிடுவாய்

தொடுப்பு

உலகமுய்ய வந்துதித்த திருமுருகப் பெருமாளே
நலமுடன் பொருளும் நல்ஞானமும் தருவாய்

முடிப்பு

மண்ணுலகு படுந்துயர் போக்கியருள் பெருமாளே
வண்ண வண்ணப் பூக்களால் அழகுறும் கந்தா
எண்ணம் சிதறா வண்ணம் காத்தருள்வாய்
துண்டியான் தம்பியே ஆறுமுகப் பெருமாளே

இராகம்:- கானமூர்த்தி	ஆ: ஸரிகமபதநிஸ்	3 வது
தாளம்:- கண்டசாபு	அ: ஸ்நிதபமகரிஸ	மேளம்

எடுப்பு

நடை நடந்து உனைப் பார்க்க
தடை தாண்டி வந்தனரே

தொடுப்பு

அருளோங்கும் கதிர் காமா
வரு மிடர்கள் களைவாயே

முடிப்பு

வினை தீர்க்க மலை யேறி
உனை நாடி வருவோர்க்கு
அகம் தனிலே முகம் காட்டி
சுகம் தந்து அருள் புரிவாய்

11

ஏனைய தெய்வங்களின் கீர்த்தனைகள்

11.1 அளவெட்டி நாகேஸ்வரம் ஶ்ரீநாகவரத நாராயணர் கீர்த்தனைகள்

தாளம்:- ஆதி — அ:ஸ்நிதபமகரிஸ } ஜன்னியம்

எடுப்பு

வேண்டுவார் வேண்டும் வரம் கொடுக்கும்
தாண்டவ மாடிடும் நாக வரதனே

தொடுப்பு

கொடிய நோய்கள் விசங்கள் போக்கி
அடியார் விரும்பிடும் நல் வாழ்வீயும்

முடிப்பு

பற்றைக் காட்டினை அற்புதம் செய்து
பசுமை வளமாக்கி ஊராய் மாற்றினான்
நாக பாம்பு வடிவம் காட்டியருளி
நாகேஸ்வர மதில் கோவில் கொண்டான்

இராகம்:- கம்னாச்ரம — ஆ: ஸரிகமபதநிஸ் } 53 வது
தாளம்:- ஆதி — அ: ஸ்நிதபமகரிஸ } மேளம்

எடுப்பு

நாராயணா நாக வரத நாராயணா
வாராயோ காட்சி தந் தருளாயோ

தொடுப்பு

அடியார் பிணிபோக்கி நல் வாழ்வீய
அளவைப் பதிமேவி நல்லாட்சி புரியும்

முடிப்பு

அறிதுயில் கொண்டு யாவு மறியும்
சிறிதேவி, பூதேவி மணவாளா – நல்
நெறி நிற்கும் மாந்தர் வாழ் வுயர
வறியநிலை போக்கக் கண் பாராயோ

11.2 வல்லிபுர ஆழ்வார் கீர்த்தனைகள்

இராகம்:- கரகரப்பிரியா   ஆ: ஸரிகமபதநிஸ் } 22 வது
தாளம்:- மிஸ்ரசாபு   அ: ஸ்நிபதமகரிஸ } மேளம்

எடுப்பு

சங்கு சக்கர நாயகனே வல்லிபுரம் மேவும்
தீங்கு போக்கிடும் இலக்குமி பதியே

தொடுப்பு

மணல் வெளிசூழழகுச் சோலை தனிலே
கோவிந்த நாமங் கூறுமடியார் குறை தீர்க்கும்

முடிப்பு

உலகேழுமளந் தாணவம் அடக்கிய – திரு
மகள் நாயகனே புவனங் குறை போக்கவே
பலகாலந் தாமதமேன் கல்கி யவதாரமெடுக்க
விரைந்தோடிவாரும் துண்டியானருகிருக்கும்

இராகம்:- சாருமதி   ஆ: ஸரிகமபதநிஸ் } 22 இன்
தாளம்:- கண்டசாபு   அ: ஸ்நிதமகஸ } ஜன்னியம்

எடுப்பு

வரம் தருவாய் ஆழ்வாரே
தரணி படும் துயர் தீர்க்க

தொடுப்பு

வருமடியார் குறை கேட்டு
விரும்பு மவர் வாழ்வீந்து

முடிப்பு

அலை கடலில் துயில் கொள்ளும்
அலை மகள் மண வாளா
தொல்லை தரும் வினை போக்கி
நல்வினைகள் ஈந் தெமக்கு

11.3 வைரவர் சுவாமி கீர்த்தனைகள்

இராகம்:- மத்தியமாவதி	ஆ: ஸரிமபநிஸ்	22 இன்
தாளம்:- ஆதி	அ: ஸ்நிபமரிஸ	ஜன்னியம்

எடுப்பு

காவல் தெய்வமே வைரவா போற்றி
பாவங்கள் நீக்கிச் காத்திடுவா யெம்மை

தொடுப்பு

சூலத்தி லுறைந்திடும் ஞான வைரவனே
சூழ் வினையறுத்து இன்னல் போக்கிடும

முடிப்பு

வடை மாலையணிந் தர்ச்சனை செய்தேன்
தடைகளை நீக்கி இன்னருள் புரிவாய்
சடை முடியுடையோனே தமிழர் குறை போக்க
கடைக்கண் பாராயோ துண்டியான் விரும்பும்

இராகம்:- சுருட்டி	ஆ: ஸரிமபநிதநிஸ்	28 இன்
தாளம்:- ஆதி	அ: ஸ்நிதபமகபமரிஸ	ஜன்னியம்

எடுப்பு

காவலனுக்கு காவலனாய் அமர்ந்த பெருமானே
பாவங்கள் போக்கி மகிழ்வைத் தந்திடுவாய்

தொடுப்பு

இளமை குன்றாவழகும் கம்பீரமும் உடைய
அளவை ஐயனார் பதிமேவும் ஞானவைரவரே

முடிப்பு

தன்னுறுதி நிலை தந்து பயம் போக்கியருளும்
உன்னிடம் கேளாமல் யாரிடம் முறையிடுவேன்
கன்மம் போய் மக்கள் மகிழ்வுடன் வாழ
என்றும் துணையிருப்பாய் துண்டியான் விரும்பும்

12

பல்லவிகள்

பல்லவி

இராகம்:- கல்யாணி　　ஆ:- ஸரிகமபதநிஸ்　　65 வது

தாளம்:- ஆதி　　அ:- ஸ்நிதபமகரிஸ　　மேளம்

1 4 / O / O //

பா மா கா; ரீ ரிகா கமா / பா , ஸ்நித பா / ம கா ரீ ரி க ம //

துண்டி யா னே வரம் அருள் / வாய். அளவை யூர் / ப தி, மே வு ம் //

தாகா தோம் ; தா ததீன் ததீன் / தாம், தகிட தோம் / ததோம் தோம் தகிட //

பல்லவி

இராகம்:- சண்முகப்பிரியா | ஆ:- ஸரிகமபதநிஸ் | 56 வது
தாளம்:- ஆதி | அ:- ஸ்நிதபமகரிஸ | மேளம்

1 4	/ O	/ O	//
பம கா, மரீ, கா ஸா ரிகம	/ பா ;, ஸ்நி த	/, பமகா ரிகம	//
பழ னி. . மலை. மே வும் . முருக	/ னே .. வரு வாய்	/, தருவாய் அருளே	//
தகதோம், ததோம், தாதோம் தகிட	/ தோம்; , தக தொம்	/, தகதோம் தகிட	//

பல்லவி

இராகம்:- கரகரப்பிரியா		ஆ:- ஸரிகமபதநிஸ்	22 வது
தாளம்:- கண்டதிரிபுடை		அ:- ஸ்நிதபமகரிஸ	மேளம்

1 4	/ O	/ O	//
பா ; மா கா ; ரீ ஸா ஸரீ கமா	/ பா , தப மா,	/ க ரீ ரி ஸ ரி க ம	//
அன் னை யே வ ரம் தந் தருள்	/ வாய், அள வைப்	/ ப தி த வ ளக் கி ரி	//
தா ; தா தோம், தா தோம் ததீன் ததீன்	/ தாம், தக தோம் ,	/ ததோம் ததிங்கிணதொம்	//

13

இராக மாலிகைகள்

சந்நிதிக் கந்தன் (இராக மாலிகை)

இராகம்:- ஆரபி **தாளம்:- ஆதி**

ஏறுது கொடி செல்வச் சந்நிதியிலே
கூறு மடியார்கள் வினை தீர்க்கவே
பேறு பெற்றிடச் செல்லு மடியார்
ஊறு படாமல் காக்கும் கந்தனே

இராகம்:- மோகனம்

எந்தன் குறைகள் போக்கி யருளும்
கந்தனுக்கு அரோகரா வேலனுக்கு அரோகரா
விந்தைகள் புரிந்த அடியார் மனதிலமரும்
கந்தனுக்கு அரோகரா வேலனுக்கு அரோகரா

இராகம்:- கம்சானந்தி

பத்திரமாய் பாற்செம்போடு மாதரும் ஆட
மத்தளமுடன் ஆடவரும் காவடி ஆட
அத்தனை அடியாரும் அவன் புகழ் பாட
பக்தியுடன் கைகூப்பி அவன் முகம் தேட

இராகம்:- சுருட்டி

ஆற்று நீராட நீங்கிடும் நோய் பிணிகள்
ஆலிலை அமுதுண்ண அகலும் கேடுகள்
ஆலயத்தில் அமர வந்திடும் மன அமைதி
ஆணவம் போக்க அறிவீந்திடும் முருகனே

நயினை நாகபூசணி அம்மன் (இராக மாலிகை)

இராகம் :- ரஞ்சினி **தாளம் :- ஆதி**

உருகாத உன்மனம் நாகபூசணித் தாயே
கருநாகம் குடைபிடிக்க வலம் வரும் அன்னையே
திருவீதியில் அலைமோதும் அடியார் கூட்டம்
அருமருந்தாம் உன்நாமம் ஓதும் ஓசை கேட்குது

இராகம்:- ஸ்ரீரஞ்சினி

தினமும் உன்னை நினைந்து வணங்கினேன்
தனமும் கல்வியும் பொருளும் சுகமும்
வினவும் அடியார்க்கு யாவும் அருளும்
மனமும் கருணையும் கொண்ட நயினையாளே

இராகம்:- கல்யாணி

இனியேன் கயவரோடு கூட்டென இயம்பி
தனியே நின்றுனை வணங்கிய பட்டருக்கு
கனிவாய் நிலவு காட்டி யருளியவளே
முனிவரும் தேவரும் போற்றும் தாயே

இராகம்:- மத்தியமாவதி

நயவஞ்சகம் பொறாமை சூழ் இவ்வுலகில்
தயவும் சுகமும் கேட்கும் எனக்கு
கயவருடன் கூட்டுச் சேரும் வழிதராமல்
தயை கூர்ந்தருள்வாய் நயினை நாகபூசணியே

14

காவடிச் சிந்து

துண்டிப் பிள்ளையார் காவடிச் சிந்து

தாளம் :- திஸ்ரசாபு

அளவைத் துண்டியடி வாசன் - அவன்
அன்புள்ளம் கொண்டவர் நேசன் - என்றும்
நேர்மையுடன் நடக்கின்ற மனிதருக் கருள்செய்யும்
நேசன் துண்டி வாசன்

உலகைக் காத்தருளும் தெய்வம் - எமக்கு
உவகை தருகின்ற தெய்வம் - அவர்
திருக்காலில் பணிவோர்க்கு என்றென்றும் துணைநிற்கும்
வேழன் உமை மைந்தன்

வேண்டும் வரம் தரும் பிள்ளை – நம்பி
வேண்டுவார்க் குதவும் வள்ளல் - உலகில்
நல்லெண்ணம் நற்செயல் உடையவர்க் கெல்லாம்
அருளும் நல்ல அன்பன்

கருணைத் தலைவனே போற்றி – உனது
திருநாமம் சொல்லியே மகிழ்ந்தோம் - துன்பம்
போக்கியருள் செய்தெம்மை இன்பங்கள் தந்தென்றும்
காப்பாய் அருள் தருவாய்

தும்பிக்கை யானே போற்றி - என்றும்
நம்பிக்கை தருபவனே போற்றி – தினம்
உன்முகம் கண்டுமனம் மகிழ்ந்திடும் பேற்றையென்றும்
தருவாய் எனக் கருள்வாய்

தம்பிக் குதவிட வேண்டி - ஆனை
வடிவாகி வள்ளியிடம் சென்றாய் - உடன்
பிறந்தோர்க் குதவுகின்ற நற்செயலை உணர்த்தினாய்
முருகன் அண்ணன் நீயே

முதல் வணக்கம் பெற்ற குருவே – உலகில்
தாய் தந்தை மதிப்பைக் காட்டினாய் - என்றும்
பெற்றோரை மதிப்பவர் வாழ்க்கையில் வசந்தத்தை
கொடுத்தாய் மகிழ்வு தந்தாய்

துண்டிப் பிள்ளையாரே போற்றி – என்றும்
துணை நிற்பவனே போற்றி – தினமும்
உன்திருவடி போற்றிப் பூசிக்கும் அருள் தந்தாய்
போற்றி நான் பணிந்தேன்

தெல்லிநகர் துர்க்கை அம்மன் காவடிச்சிந்து

தாளம் :- திஸ்ரசாபு

தெல்லி மாநகர் தாயே – உலகத்
தெய்வப் பராசத்தி மாதா – எனக்கு
தெள்ளிய ஞானமும் தனத்தையும் தந்திடும்
தெல்லி துர்க்கா தேவி

கருணை வடிவான அன்னை – அபயம்
காட்டி காக்குமெங்கள் தேவி – அறம்
காத்திடும் அடியார்க்கு எப்போதும் துணைநிற்கும்
கருணை துர்க்கா தேவி

வடிவு நிறைந்த சுந்தரி – சிங்க
வாகன மேறிடும் அம்மை – அவள்
வருமடியார் குறைபோக்கி அருள்சுரந்து காப்பவள்
வீர துர்க்கா தேவி

மங்கையர் திலகமே வல்லி – சிவன்
மனம் கவர்ந்திடும் தாயே – அவள்
மலர்ப்பாதம் பணிவோர்க்கு குறைபோக்கி சுகமேதரும்
மாரி துர்க்கா தேவி

தாயாகி வந்தருள் புரியும் – தங்கத்
தாமரை ஏறிடும் பார்வதி – என்றும்
தீமைகளை ஒழிப்பவள் இன்னருள் சுரப்பவள்
தாயே துர்க்கா தேவி

திருவெல்லாம் தருகின்ற தாயே – நினது
திருவடி வணங்கி நின்றோம் – என்றும்
திருநாமம் சொல்லியே துதித்திட அருள்வாய்
திருவே துர்க்கா தேவி

துண்டியான் விரும்பிடும் தாயே – பணிவோர்
துன்பம் போக்கிடும் அன்னையே – அடியார்
மும்மலங்கள் தீர்ப்பவள் ஏழ்மையினை அகற்றுபவள்
முக்கண்ணி துர்க்கா தேவி

அகிலாண்ட தலைவியே போற்றி – என்றும்
அருள்நிறை அன்னையே போற்றி – உலகு
அருள்பெற்று துயர்தீர்ந்து வாழ்ந்திட அருள்வாய்
தெல்லி துர்க்கா தேவி

நல்லைக் கந்தன் காவடிச் சிந்து

தாளம் :- திஸ்ரசாபு

நல்லை மாநகர் மேவும் – அழகுக்
கந்தனே உன்தாள் போற்றி – வாழக்
கல்வியும் செல்வமும் சுகத்தையும் ஈந்திடும்
கந்தா நல்லை வாசா

தெய்வானை போற்றிடும் முருகா – காக்கும்
தெய்வமாய் நின்றிடும் அரசே – சரவண
பொய்கையில் தோன்றிய கருணை வடிவான
ஐயனே நல்லை முருகா

வள்ளி மணாளனே வேலவா – வண்ணப்
புள்ளி மயிலேறும் முருகா – என்றும்
அள்ளியள்ளி கொடுத்து குறைகளைப் போக்கிடும்
வெள்ளை மனக் குமரா

அலங்காரக் கந்தனே வருக – மாந்தர்
அகங்காரம் அகற்றி அருள்க – உந்தன்
அரும்பாதம் பணிகின்றேன் குறைபோக்கி சுகம்தருவாய்
அழகா நல்லை முருகா

அழகுக் கந்தனே வருக – என்றும்
அவனி தழைக்க அருள்க – உலகில்
தீமைகளை அழித்து இன்னருள் வழங்கும்
தீரா நல்லைக் கந்தா

துண்டியான் விரும்பிடும் தம்பி – அடியார்
துன்பம் போக்கிடும் அழகன் – வரும்
அடியவர்க் குறைபோக்கி இன்னருள் வழங்கும்
அமரா நல்லை முருகா

ஆறுபடை வீடு கொண்டவா – தோளில்
காவடி தூக்கி யாடினோம் – தினமும்
உன்நாமம் சொல்லியே துதித்திட அருள்தருவாய்
வேலா நல்லைக் கந்தா

கந்தா முருகா வேலா போற்றி – எமக்கு
கருணை காட்டுபவனே போற்றி – உன்தாள்
பணிவோர்க்கு துயர்தீர்த்து மகிழ்வை அள்ளியருளும்
நல்லை வாழும் முருகா

சந்நிதி முருகன் காவடிச் சிந்து

தாளம் :- திஸ்ரசாபு

எந்நிதியும் தரும் சந்நிதி – அன்னக்
கந்தனே உன்தாள் போற்றி – அடியார்
பிணிபோக்கி குறைதீர்த்து சுகவாழ்வு தந்திடும்
சந்நிதி வாழும் முருகா

மயில் வாகனமேறி வந்திடும் - எங்கள்
கயிலை முதல்வன் மகனே – வரும்
அடியார்கள் பசிபோக்கி வயிறார அன்னமிடும்
அமுதன் வேல் முருகன்

அழகனே உந்தாள் பணிந்தோம் - என்றும்
அடியாரில் உறைபவனே போற்றி - கூறும்
அடியார்கள் கதைகேட்டு குறைபோக்கி அருள்தருவாய்
துண்டியான் தம்பி குமரா

காவடி தோளின்மேல் சுமந்து – செம்புக்
காவடி தலையில் சுமந்து – உந்தன்
நாமங்கள் பாடியே மகிழ்வுடன் ஆடுகின்றோம்
அருளும் கதிர் வேலா

ஆலமுது பிணியைத் தீர்க்கும் - தங்க
வேலது வினையைப் போக்கும் - உந்தன்
பாதங்கள் பணிந்தோமே சுகவாழ்வு தந்திடுவாய்
பாவம் போக்கும் குமரா

சந்நிதிக் கந்தனின் தலத்தில் - கேட்கும்
செந்தமிழ் இசையின் ஓசை – உந்தன்
புகழ்தனை ஓதுகின்றோம் துன்பங்களைப் போக்கிடுவாய்
முருகா மாயோன் மருகா

வள்ளி தெய்வயாணை மணாளன் - அவன்
அள்ளி வழங்கும் கொடையாளன் - தினம்
உன்முகம் பார்த்தருள் பெறும்பேற்றைத் தந்தருள்
குமரா சிவன் மைந்தா

சந்நிதி முருகனே போற்றி – உமை
மைந்தனே உன்பாதம் போற்றி – என்றும்
தொண்டை மானாறில் மேவியருள் புரிகின்ற
சந்நிதி வேல் முருகா

மாவைக் கந்தன் காவடிச் சிந்து

தாளம்:- ஏகம்

இராகம்:- செஞ்சுருட்டி

மாவைக் கந்தன் பேரை,
மனத்தால் தினமும் நினைத்தால்
உள்ளம் மகிழுதடி….. மயிலே
தேகம் சிலிர்குதடி….. மயிலே
தேகம் சிலிர்குதடி

மாருதப் புரவீக வல்லி,
மறுகொண்ட முகமும் மாற
கந்தனை வணங்கியே….. மயிலே
அழகு பெற்றாளடி….. மயிலே
அழகு பெற்றாளடி

அழகு முருகனைக் கண்டு,
தொழுது வணங்கி நின்றேன்
துன்பம் பறந்ததடி….. மயிலே
மனம் துள்ளுதடி….. மயிலே
மனம் துள்ளுதடி

அபிசேகக் கந்தன் புகழ்,
அகமகிழ்ந்து பாடி நின்றேன்
அவனொளி தெரியுதடி….. மயிலே
கவலை மறக்குதடி….. மயிலே
கவலை மறக்குதடி

துண்டியான் தம்பி வேலனை,
திண்ணமாக பிடித்து நின்றால்
கேட்பது கிடைக்குமடி ….. மயிலே
அவனருள் போதுமடி….. மயிலே
அவனருள் போதுமடி

வண்ண மயில் வாகனனை,
கண்குளிர வணங்கி நின்றால்
ஓடோடி வருவானடி….. மயிலே
கந்தப் பெருமானடி ….. மயிலே
கந்தப் பெருமானடி

கதிர்காமக் கந்தன் காவடிச் சிந்து

தாளம்:- ஏகம் (திஸ்ர நடை)

இராகம்:- செஞ்சுருட்டி

கதிகாமக் கந்தனுக்கு அரோகரா - தோளில்
காவடி தூக்கியே ஆடிடுவோம் - அவன்
கிருபையைப் பெற்றிடத் தாள் பணிவோம் - என்றும்
கீர்த்தி பாடிப் பூமாலை சாத்திடுவோம்

நீயிருக்கப் பயமேன் முருகா – தினமும்
உன்நாமம் ஓதியே மகிழ்ந்திருப்போம்

சரவணப் பொய்கையில் உதித்தவனே - ஈழத்தில்
சாந்தியும் அமைதியும் தந்தருளே - உனது
சித்தத்தால் மனங்கள் இழக வேண்டும் - என்றும்
சீருடனே மனிதர்கள் இருக்க வேண்டும்

நீயிருக்கப் பயமேன் முருகா – தினமும்
உன்நாமம் ஓதியே மகிழ்ந்திருப்போம்

தண்டாயுத பாணியே போற்றி போற்றி – இன்னும்
தாமதமேன் அருள்தந்து காத்தருளே – உந்தன்
திருவடியைப் பற்றியே வணங்கி நின்றோம் - தமிழர்
தீராப் பிரச்சினை தீர்த்தருள்வாயே

நீயிருக்கப் பயமேன் முருகா – தினமும்
உன்நாமம் ஓதியே மகிழ்ந்திருப்போம்

பரமன் மகனே தருவாயருளே – என்றும்
பாமரர் விரும்பிடும் குமரனே – படைக்கும்
பிரமன் மதித்திட்ட குருவே – மாந்தர்
பீதி நீங்கி நலமுடன் வாழ அருள்வாய்

நீயிருக்கப் பயமேன் முருகா – தினமும்
உன்நாமம் ஓதியே மகிழ்ந்திருப்போம்

மலை மீது ஏறியே வணங்கி நின்றேன் - உந்தன்
மாதவம் பெற்றிட அருள் தருவாய் - மனதில்
மிளிருமுன் அழகினைக் கண்டு கொண்டேன் - அடியார்
மீதுந்தன் கருணையைக் காட்டி நிற்பாய்

நீயிருக்கப் பயமேன் முருகா – தினமும்
உன்நாமம் ஓதியே மகிழ்ந்திருப்போம்

வந்தருள் புரிவாய் முருகேசா - புவனம்
வாழ்ந்திட என்றும் துணையிருப்பாய் - மாந்தர்
விஞ்ஞையைப் பெற்றிட அருள் புரிவாய் - எங்கும்
வீசுமுன் புகழ்பாடிப் பணிந்து நிற்போம்.

நீயிருக்கப் பயமேன் முருகா – தினமும்
உன்நாமம் ஓதியே மகிழ்ந்திருப்போம்.

15

திருப்புகழ்

நல்லூர்க் கந்தன் திருப்புகழ்

தனனா தானா தனதானா
தனனா தானா தனதானா

தமிழால் உன்னைப் பாடிடவே
அருள்வாய் என்றும் சிவமைந்தா
அமிழ்தினும் இனியத் தமிழாலே
பாடிய ஔவைக் கருளியவா
உமிபோல் என்றும் காப்பவனே
துண்டி யானுக் கிளையோனே
குமிண் சிரிப்பாலெனைக் கவர்ந்தவனே
நல்லைக் கந்தப் பெருமாளே

சந்நிதிக் கந்தன் திருப்புகழ்

தந்ததன தந்ததன தானா தானாத் தனதானா
தந்ததன தந்ததன தானா தானாத் தனதானா

எந்நிதியும் அடியார்க்கு கருணை கொண்டு தருவோனே
அன்னமிட்டு பசிபோக்கும் அடியார் கொண்ட வேலவனே
உந்தனைப் போற்றினோம் தெய்வ யானை மணவாளா
இவ்வுலகில் சிறப்புடனே வாழ அருள் புரிவாயே
கந்தனே உன்பாதம் கண்டு வணங்கி நின்றோமே
கவலைகள் போக்கியே மகிழ்வைத் தந்து அருள்வாயே
விந்தைகள் பலபுரியும் துண்டி யானுக் கிளையோனே
ஆற்றங்கரைப் பதிமேவும் செல்வச் சந்நிதிப் பெருமாளே

மாவைக் கந்தன் திருப்புகழ்

தனன தனதன தானத் தனதன
தனன தனனா தனாத் தானா

விரும்பு மடியவர் வேண்டித் துதிக்கும்
இடரைக் களைந்து அருள் வோனே
மருவு மிருவரின் தாய்மை மனமது
கனிவு கொடுத்து மருள் நீக்கும்
இருளில் சுழலும் மாந்த ரறிவினை
தெளிவு கொடுத்து அருள் வாயே
கருணை வடிவான துண்டி யானுடை
தம்பி மாவைப் பெரு மாளே

கதிர்காமக் கந்தன் திருப்புகழ்

தனன தனா தான தனா தான தனா தனதானா
தனன தனா தான தனா தான தனா தனதானா

அழகு மயில் மீதில் வந்து அருள் ஈயும் அழகோனே
கனிவு மனம் கொண்ட வள்ளி தெய்வ யானை மணவாளா
முழவு ஒலிக்க குழலு மிசைக்க மிடுக் குடன் வருவோனே
தொண்டர் படை சூழந்து வரக் காட்சி அருள் தருவாயே
பழகு மடியார் குறை போக்கி சுகம் தரும் அருளோனே
அண்ண னாகத் துண்டி யடிப் பிள்ளை யாரை உடையோனே
அழற் கண்ணன் உமா தேவி விரும்பு கின்ற முதல்வனே
கதிரை மலை மேவி யருளும் கதிர் காமப் பெருமாளே

காலமும் நேரமும் இடமும் கருவியாய் செயற்பட நாமும் இணைகிறபோதே நேரியசெயல்கள் விரிகின்றன. இவற்றுள்ளும் நல்நோக்கு கைங்கரியங்களாலேயே சமூகத்தில் தெய்வீகமணம் பரவியதுவாக பின்னும் நின்றுநீடிக்கும். இப்படியாய் விருப்பமும் ஆற்றலும் கைப்பொருளும் காலத்தேவையும் தெய்வீகத் திருவுளமும் கொண்டதே இந்த செயற்கரிய முயற்சியின் முகிழ்ப்பு. சகலவரமும் ஈய்ந்தருளும் அளவெட்டி வடக்கு துண்டிப் பிள்ளையார் வழிபாட்டின் மூலமாயமைந்த பாரம்பரியத்தோடு நிதப்பராமரிப்புமான ஈடுபாடு மிகக்கொண்ட பக்திசிரத்தையோடு தூயதமிழிசைப் பாடல்களை வெள்ளிவிழா காலத்தில் அரும் பொருத்தமாக தாமே யாத்ததோடு அதனை தொகுத்துக் கோர்த்து மலராக்கி எமக்குரியதாக்கும் தெய்வீகப்பணியைச் செய்திருக்கிறார்.

அருட்திரு சிவபாதரத்தினம் சிவசிவா அவர்கள் இத்தகு சீர்மைநெறிச் சீராக்கம் கொண்டு நாயன்மார்கள் வழித்தோன்றலாய் உலகமுய்வுற பாடிப்பரவும் அடியவராய் அவர்களின் கவித்துவப்பணியும் செயற்திறன் மேன்மையும் இந்நூலில் மிளிரக் காண்கிறேன். இவற்றைப் பாடித்தினமும் பயன்பெற்று பொங்கும் வளத்தாலும் வாழ்த்துகளாலும் எல்லோரும் நிறைந்தே இன்புற்றிருப்போம் !

பூரண சுவாமிகள்
பூரண இல்லம் – சுவிற்சலாந்து
பூரண நிலையம் – ஊரெழு

ISBN 978-624-92566-0-6

9 786249 256606

கிங்ஸ் பதிப்பகம், கொடிகாமம் (077) 122 0195